24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 238 ஆடி 09 ஆம் நாள் வியாழக்கிழமை 25 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## தமிழர்கள் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிக்கிறது ஐ.தே.க

### சு.க. பொதுச்செயலர் சுட்டிக்காட்டல்

**கொழும்பு, ஜூலை 25**

**தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்து முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க முன்வைத்த பிரேரணையை தீயிட்டு கொழுத்திய ஐக்கிய தேசிய கட்சியினர் தற்போது தமிழ் மக்களின் அரசியல் தீர்வு குறித்து கவனம் செலுத்துவது வேடிக்கையாகவுள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.**

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.** 21

## பொய்த்தது ஞானசாரர் வாக்குறுதி

கொழும்பு, ஜூலை 25
30 நாள்களைக் கடந்தும் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் கலகொட அத்தே ஞானசார தேரர் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டார் என்ற விமர்சனம் கல்முனைத் தமிழர்களிடத்தில் எழத் தொடங்கியுள்ளது.
ஜூன் மாதம் 17ஆம் திகதி கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தை உரிய 21

## கோத்தபாய இல்லாவிடில் தினேஸ்

கொழும்பு, ஜூலை 25
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக தெரிவு செய்யப்படக் கூடியவர்களில் தினேஸ் குணவர்த்தனவின் பெயரும் இடம்பெற்றுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
மூத்த அரசியல் வாதியும் மக்கள் 21

## ஐ.நா. அறிக்கையாளரைச் சந்திக்க நீதித்துறை அதிகாரிகளுக்குத் தடை

கொழும்பு, ஜூலை 25
ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ற் நயாலெட்சோசி வூட் நீதித்துறை அதிகாரிகள் இடையிலான சந்திப்பை நிறுத்துமாறு சபாநாயகர் கரு ஜெயசூரிய அறிவுறுத்தியுள்ளார். அயலுறவுத் 21

## பிரபாகரன் இருந்திருந்தால் குருமுதல்வர் மீது சுடுதண்ணீரால் ஊற்றியிருக்க முடியுமா?

*சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி*

யாழ்ப்பாணம், ஜூலை 25
விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் இன்று இந்த நாட்டில் இருந்திருந்தால்திருகோணமலையிலே எமது குரு முதல்வர்மீது சுடுதண்ணீர் ஊற்றியிருக்க முடியுமா 21

## அனைத்து இன மக்களையும் அரவணைத்துச் செல்வேன்

*முல்லையில் வைத்து சஜித் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 25
யாரையும் உதாசீனப்படுத்தும்படியோ, ஒதுக்கும்படியோ, யாரிடமும் உயர்வு தாழ்வு பார்க்கும் 21

## தென்மராட்சி கிழக்கில் வாள்வெட்டுடன் திருட்டு

கொடிகாமம் ஜூலை 25
தென்மராட்சி மந்துவில் கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணிக்கு வாள்வெட்டுடன் திருட்டு இடம்பெற்றுள்ளது. தெருவோரப் பிள்ளையார் கோவிலடியிலேயே இது நடந்துள்ளது. மந்துவில் கிழக்கு கள்ளுத்தவறணையின் முகாமையாளரான 21

## மானிப்பாய் துப்பாக்கிச் சூடு உயிரிழந்தவருடன் தொடர்பென மேலும் இருவர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 25
மானிப்பாயில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படும் நிலையில், அவருடன் தொடர்பு என்ற சந்தேகத்தில் மேலும் இருவர் 21

## 30 கிலோ கஞ்சாவுடன் ஊறணியில் ஒருவர் கைது

வடமராட்சி, ஜூலை 25
வல்வெட்டித்துறை. ஊறணிப் பகுதியில் 30 கிலோ கஞ்சாவுடன் நபரொருவர் 21

## கொழும்பில் வெள்ளை வானில் கடத்தப்பட்ட தமிழர்கள் எங்கே?

*விசாரணை தொடர்கின்றது என்கிறார் பொலிஸ் பேச்சாளர்*

கொழும்பு, ஜூலை 25
கொழும்பில்வைத்துவெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட தமிழர்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர 21

## உந்துருளி–டிப்பர் விபத்து இளைஞன் பரிதாபச் சாவு



வடமராட்சி, ஜூலை 25
உந்துருளி - டிப்பர் இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் உந்துருளியில் பயணித்த 19 வயதேயான இளைஞன் உயிரிழந்தார்.
நெல்லியடியில் நேற்றுக் 21

யாழில் பிரமாண்டமான வளாகத்தில்
One year Top Up Degree
UGC Recognized International Degree
www.blccampus.edu.lk
- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)

✓ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✓ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்

For more information: 0777 174 443



Entry requirement
HND / any Equal Qualification in the similar study

BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk

## மரண அறிவித்தல்கள்



### தியோகு மோசேஸ் பத்திநாதர்

**(இளைப்பாறிய லிகிதர், யாழ். போதனா வைத்தியசாலை)**

குலமாங்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், 4/5, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தியோகு மோசேஸ் பத்திநாதர் (இளைப்பாறிய லிகிதர், யாழ்.போதனா வைத்தியசாலை) நேற்று (24.07.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோகு மோசேஸ், மோசேஸ் அடைக்கலம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கஸ்பார் தோமஸ், தோமஸ் ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மரியம்மா பத்திநாதரின் கணவரும், காலஞ்சென்ற தோமஸ் பிரான்சிஸின் மைத்துனரும், காலஞ்சென்ற றோஸ்மேரி வசந்தா ஜெயக்குமாரின் பாசமிகு தந்தையும், நிக்கலஸ் விக்ரர் ஜெயக்குமாரின் மாமனாரும் யோ அன்ரனியோ, ஷறோன் மரியா, செறின் லிசி, கெலன் றூபிஷா ஆகியோரின் பேரனும், லூர்தம்மா, அருளானந்தம், மேரி மாகிறேற், பெனடிக்ற் ஆசீர்வாதம், றீற்றா பாக்கியம், மதுரநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பிரான்சிஸ் சேவியர், மேரி சிசில், சூசைப்பிள்ளை, பெனிக்னா றுக்மணி ஆசீர்வாதம், அப்பையா, பத்மாவதி, அமலதாஸ் ரணசிங்கம், காலஞ்சென்ற இராஜசிங்கம் மற்றும் ஜெயரட்ணம், ஸ்ரெலா, அஞ்சலா, ரஞ்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (25.07.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**4/5, 3ம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:-**
**நி.விக்ரர் ஜெயக்குமார்**
**(மருமகன்)**
**021 491 2018, 076 874 8932**

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 05 . 1932



இறப்பு 23 . 07 . 2019

### அப்புக்குட்டி நாகம்மா

கணேஸ்வரம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி நாகம்மா கடந்த (23.07.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகன்-முத்தி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அப்புக்குட்டியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நன்னியரின் அன்புச் சகோதரியும், பூபாலசிங்கம், ஸ்ரீகாந்தேஸ்வரி, குகனேஸ்வரன், ராஜேஸ்வரி, ரவிமலர், காலஞ்சென்ற உதயசீலன் மற்றும் கிருபாகரன் (வலி வடக்கு பிரதேசசபை), சத்தியசீலன் (லண்டன்), ரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நகுலேஸ்வரி, காலஞ்சென்ற செல்லமுத்து மற்றும் செல்வராணி, இரத்தினசிங்கம், பத்மாவதி (பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்), தமிழ்ச்செல்வி, றோமலா (லண்டன்), இந்துமதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுபாஜினி, சுதர்சினி (ஆசிரியை), மோகன்ராஜ் (லண்டன்), சுகந்தினி (ஆசிரியை), மதன்ராஜ் (லண்டன்), தயாபரன் (கனடா), கிருபாகரன் (சுவிஸ்), கௌதமி, அருள்ராஜ், கவிதா, பகில்ராஜ் (சிவில் பாதுகாப்பு உத்தி யோகத்தர்), தர்மினி, நிறோஜினி, பிரியங்கன் (Allianze), கபியங்கா, பிரஸ் தனா, விஷ்னுகா, வினோஜன், டனுஷன் (லண்டன்), கிருஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்திலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**கருகப்புலம், கணேஸ்வரம், அளவெட்டி** **தகவல்:- குடும்பத்தினர்.**

**T.P: 077 326 5191**

## கண்ணீர் காணிக்கை

மலர்வு 24 . 08 . 1943



உதிர்வு 23 . 07 . 2019

அமரர்


**செல்லத்துரை வைரமுத்து**

(வண்ணை ஸ்ரீ வீரகாளியம்மன் ஆலய தொண்டரும் பரிபாலனசபை முன்னாள் பொருளாளரும்)

புன்னகையுடன் சத்தம் சந்தடி இன்றி
அமைதியாய் அகிம்சையாய் ஆலயத்தொண்டும்
சமூகத்தொண்டும் புரிந்தவரே
இக்கட்டான சூழலிலும் வைரமாக நின்றவரே
எங்கள் வைரமுத்து அண்ணா!
கலகலப்பான சிரிப்பொலியுடன் விறுவிறுப்பாக அனைவரையும்
இணைத்து ஆலயத்தொண்டும் சமூகத்தொண்டும்
ஆற்றுவீரே எங்கள் சிவானந்தம் அண்ணா!
எம்மை எல்லாம் மீளாத்துயரில் மூழ்கடித்து ஒருவர்பின் ஒருவராக
விழிமூடி மௌனித்த இருவருக்கும்
எமது இதய அஞ்சலிகள்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

**ஆழ்ந்த துயரத்துடன்**

மலர்வு 07 . 03 . 1936



உதிர்வு 24 . 07 . 2019


அமரர்

**சின்னத்தம்பி இரத்தினசபாபதி**

(வண்ணை ஸ்ரீ வீரகாளியம்மன் ஆலய தொண்டரும் பரிபாலனசபை முன்னாள் செயலாளரும்)

**தொண்டர்சபை, வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்**

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி இரத்தினசபாபதி (சிவானந்தம்)

**(இளைப்பாறிய (CTB) இலங்கை போக்குவரத்து சபை சாலை பரிசோதகரும், யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையப் பொது முகாமையாளரும், வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் செயலாளரும்)**

கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தி மற்றும் அம்மன் வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினசபாபதி (சிவானந்தம்) நேற்று (24.07.2019) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-கருணாகடாட்சி அம்மா (அம்மாபிள்ளை) தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து மனோன்மணி தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் (ஜானகி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மதியாபரணம், தையல்நாயகி, இரத்தினம், மங்கையற்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சக்திராஜா (லில்லி அவனியூ, வெள்ளவத்தை), மாலினி, வசந்தராஜன் (கஜானன் பல்பொருள் வாணிபம்), ரோகினி (ஜேர்மனி), காலஞ்சென்ற இராஜபாலன் (கண்ணன்), குகதாசன் (பதிவாளர், மாவட்ட / நீதிவான் நீதிமன்றம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கலாநாதன்(சிவா, உடுவில்) மற்றும் விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), ரஜிதா, கோசலை (காணிக்கிளை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கபிலஷா, கஜானன், சாருதா, டிலாந்தினி, நாகாசினி, பிரவின்ஜா, மகிஷாயினி, கேசாயினி, ரிஷானன், ஜனனி ஆகியோரின் அன்புப் பேரனும், மகேந்திரராணி, ஸ்ரீகந்தராஜா, மகேந்திரராஜா (இந்திரன்), யோகேந்திரராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2019) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**45/10, அம்மன் வீதி, கந்தர்மடம்,**
**(யாழ்பாடி விடுதிக்கு அருகில்)**

**தகவல்: குடும்பத்தினர்.**

**T.P: 077 307 5330, 021 221 7850**

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 472 சீட்டிழுப்பு திகதி: 2019.07.23
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்க்கிழமை
I 11 33 41 42
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.132,396,648/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24.07.2019 வெற்றி வாரம் 2567 வர்ணம் பச்சை
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 13 23 52 59
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,516,018/=
25.07.2019ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3213 திகதி: 2019.07.24 புதன்கிழமை
ஷனிதா SATURDAY FORTUNE
ஊதா
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 12 22 31 37 R
போனஸ் இலக்கம் 52
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 52,989,500/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 679
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.07.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 72,925,875/-
வெற்றி இலக்கங்கள் 23 37 50 57
ஆங்கில எழுத்து S
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0114 825 825




# தும்பி

தும்பி நீரில் முட்டைகளை இட்டு பொரிக்கின்றன. தும்பிகளால் மனிதனுக்கு அதிக நன்மைகள் உண்டு. அவை ஈக்களையும் நுளம்புகளை யும் பிடித்து உண்டு விடுகின்றன. தும்பி நீரிலிடும் முட்டையிலிருந்து இளம் பூச்சிகள் வெளிவருகின்றன. இவை தாயைப் போன்ற தோற்றமுடையனவல்ல. இளம் தும்பியைப் பார்த்தவர்கள் அது அழகிய தும்பியாக வளருமென நம்ப மாட்டார்கள். தும்பியின் முக்கிய உறுப்பு அதன் கீழ் அலகு. அலகு வளர்ந்து நீண்டிருக்கும். அது தாவரங்களில் மறைந்திருந்து பக்கத்தால் ஊர்ந்து செல்லும் எதையும் நீண்ட அலகுகளால் பிடித்து உண்ணும். அது பலமுறை



தோலை உரித்துக் கொண்டு வளரும். அது நீரின் கீழ் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் தங்கியிருக்கும். அந்தக்காலத்தில் மூச்சு விடுவதற்கு அதன் கீழ் வயிறு, செவிள் போலப் பயன்படுகிறது. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பின் அது நீருக்கு வெளியே ஊர்ந்து வந்து கடைசியாகத் தோலை உரித்து விட்டுத் தும்பியாகப் பறந்து செல்லும். இதற்குக் கூட்டுக் கண்களுண்டு. ஒவ்வொரு கண்ணிலும் 3ஆயிரம் சிறிய கண்கள் உள்ளன. வெளியே பறக்கும் போது அது சிறிய பூச்சிகளையும் நுளம்புகளையும் பிடித்துத் தின்னும்.

## கத்தரிக்காய்

உண்ணச் சுவைக்கும் காய்தான்
உருண்டு திரண்ட காய்தான்
எண்ணெய்க் கொழுப்பை நீக்கி
இதயம் காக்கும் காய்தான்
மண்டைக் கவசம் போட்டு
மலைக்க வைக்கும் காய்தான்
கொண்டைக் காம்பை நீட்டும்
குண்டு கத்தரிக் காய்தான்!

நரம்பு நோயைப் போக்கும்
நாளும் இளமை காக்கும்
சிரங்கும் அரிப்பும் தோன்றின்
சீண்டிப் பார்க்கும் காய்தான்
அரசன் வேடம் பூணும்
அழகு கத்தரிக் காய்தான்

வேலையாள்கள் தேவை
சாவகச்சேரியில் இயங்கும் எரிவாயு விற்பனை நிலையத்திற்கு தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. கல்வித் தகைமை க.பொ.த உயர்தரம்
தொடர்பு:-077 225 0149

வீடு விற்பனைக்குண்டு
கோண்டாவில் உப்புமடம் சந்திக்கு அருகாமையில் 2பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(CS 26875)(14.17)
தொடர்பு: 077 563 3401

வீடு விற்பனைக்கு
23A புங்கங்குளம் வீதியில் 1 1/4 பரப்பு காணியில் அமைந்துள்ள புதிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
தொலைபேசி இல:- 0041 7658 22867
076 196 0558
077 669 3471

## பகிரங்க ஏல விற்பனை
## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
## வடமாகாணம்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கீழுள்ள திருநெல்வேலி செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்தின் பழைய கட்டடத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கீழ்வரும் பொருள்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் 30/07/2019 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு விற்கப்படவுள்ளதால் இதனை கொள்வனவு செய்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் அன்றைய தினம் நடைபெறுகின்ற ஏல விற்பனையில் கலந்துகொள்ளலாம் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

வளை (பாலை), தீராந்தி (பாலை), பனைமரம் (சிலாகை), யன்னல் (மரம், இரும்பு), கூரைத்தகரம், கூரைசீற் (Aspestors), ஓடு, முகட்டோடு, கதவு, இரும்பு பைப் மற்றும் மின் இணைப்பு பொருள்கள். ஏல விற்பனை செய்யப்படவுள்ள பொருள்கள் மற்றும் ஏனைய விவரங்களை அலுவலக நாள்களில் முற்பகல் 10.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை திருநெல்வேலியில் அமைந்துள்ள செயற்கை முறை சினைப்படுத்தல் அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ள கால்நடை வைத்திய அலுவலகத்தில் பார்வையிடலாம்.

**மாகாணப் பணிப்பாளர்,**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

## மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 05 . 1931 — இறப்பு 23 . 07 . 2019

### செல்வி மருதர் தங்கமேனி

மண்டைதீவு கிழக்கு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.16 மடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மருதர் தங்கமேனி கடந்த (23.07.2019) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதர் - சொர்ணம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வே. செல்லாச்சி, சி.விசாலாட்சி, மற்றும் இராமையா, க.அமிர்தமணி, காலஞ்சென்ற ம.கண்ணகை மற்றும் த.பூமணி, அ.யோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சி.கலாவதியின் பாசமிகு வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று (25.07.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மணியம்தோட்டம் அப்போஸ்தலர் சபை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.16C மடம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பெறாமக்கள்.**

## 94ஆவது பிறந்த தின நினைவு நாள்
**25.07.2019**



### அமரர் கதிர்காமு சிதம்பரப்பிள்ளை
**(கரவையதார்த்தன்)**
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

"பிறப்பும் இறப்பும் பெரியாருக்கில்லையாகி
அறத்தின் வழியொழுகி அறமாகி வாழ்ந்த
விறல் வேந்தரெங்கள் அப்பா பூமிதனில்
பிறப்பெனும் நிகழ்வில் பிறைநுதலானார் வாழ்க
நீங்கள் எமை விட்டு மாதங்கள் ஐந்து ஆகிலும்
ஆறவில்லை எம் துயரம் இந் நாளில் உங்கள்
ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்."

**ஜீவோதயம்,**
**வதிரி,**
**கரவெட்டி**

என்றும் நீங்கா நினைவில்
**குடும்பத்தினர்.**

# நிதானமே பிரதானம்



ஆட்டுக்குச் சொந்தக்காரன் ஒருவன் தன் இரண்டு ஆடுகளை கூட்டிச் சென்றான். ஓரிடத்தில் அடர்த்தியான செழிப்பான புல்வெளி இருந்தது. அந்த இடத்தில் தன் இரண்டு ஆடுகளையும் அவன் மேய விட்டான். அவனுடைய இரண்டு ஆடுகளில் ஒன்று நிதான புத்தியுடையது. மற்றொன்று பேராசையும் நிதானமில்லாக் குணத்தையும் கொண்டது. செழிப்பான புல்வெளியைக் கண்ட அந்தப் பேராசைக்குணம் கொண்ட ஆடு புல்வெளி அனைத்தையும் மேய்ந்து விடுவதைப் போல் தன் நிதானமற்ற போக்கைக் காட்டத் தொடங்கியது. ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக புற்களைக் கடித்துக் கொண்டே அது அலைந்தது. பேராசை கொண்ட மனிதர்கள் பணம் சேர்க்கும் பேராசையில் ஓரிடத்தில் நிலைத்து நின்று தொழில் செய்யாமல் மாறிக்கொண்டே இருப்பார்கள். ஓர் இடத்திலும் அவர்கள் வெற்றியைக் காணாமல் மனம் அலைபாய்ந்தபடி வேறு இடங்களுக்குச் செல்வார்கள். எந்த இடத்திலும் அவர்கள் மனம் நிலைத்து நிற்காது. இந்தத் தொழில் செய்வதை விட அந்தத் தொழிலில் அதிக பணத்தைக் குவித்து விடலாம் என்று கணக்கு போடுவார்கள். அந்தத் தொழிலில் இறங்கியதும் வேறு தொழிலுக்குத் தாவுவார்கள். இப்படி நிலையற்ற புத்தியுடன் அலைந்து கொண்டிருப்பவர்கள் உருப்படியாக எதையும் செய்து முடிக்க மாட்டார்கள் அல்லவா? அதேபோல பேராசைக் குணம் படைத்த அந்த ஆடு ஓர் இடத்தில் நின்று மேயாமல் தானே எல்லாப் புற்களையும் மேய்ந்து விட வேண்டும் என்கிற வேறு உணர்வுடன் ஓடிக்கொண்டே இருந்தது.

ஆனால் மற்ற பொறுமைக்குணம் படைத்த ஆடு அந்தச் செழிப்பான புல்வெளியைப் பார்த்ததும் பதற்றம் ஏதும் கொள்ளவில்லை. ஒரே இடத்தில் இருந்து கொண்டு பொறுமையாக அது புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட நேரம் கடந்ததும் ஆட்டுச் சொந்தக்காரன் அவற்றைத் தன் வீட்டுக்கு ஓட்டிச் சென்றான். அந்த நேரத்துக்குள் பொறுமையாக மேய்ந்து கொண்டிருந்த ஆடு தன் வயிறு நிறையும் அளவுக்கு மேய்ந்தது.

ஆனால் பேராசைக்குணம் கொண்ட ஆடு எல்லாவற்றையும் மேய்ந்துவிட வேண்டும் என்கிற அவசர புத்தியில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் புற்களைக் கடித்துக் கொண்டே இருந்ததால் அதன்பசி தீரவில்லை. பட்டினியுடன் அது நிதானமில்லாமல் சென்று கொண்டிருந்தது.

இந்த இரு ஆடுகளின் நிலைமைதான் இப்போது வையகத்தில் வாழும் மனிதர்களின் நிலையுமாக உள்ளது. நிதானமும் விவேகமும் கொண்ட மனிதர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கைப் பாதையில் அமைதியான பயணத்தைத் தொடர வேண்டும்.

## கண்ணீர் அஞ்சலி



முல்லைத்தீவு மாவட்ட/ நீதிவான் நீதிமன்றில் பதிவாளராக கடமையாற்றும் **இ.குகதாசன்** அவர்களின் அன்புத் தந்தை
**சின்னத்தம்பி இரத்தினசபாபதி**
அவர்கள் 24.07.2019 அன்று கால மானதையிட்டு ஆழ்ந்த துயரில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்Cே-

**நலன்புரிச்சங்கம்,**
**மாவட்ட நீதிவான்நீதிமன்றம், முல்லைத்தீவு**

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
**கீரிமலை ஆடி அமாவாசை தினத்திற்கான (31.07.2019) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல்.**

கீரிமலை ஆடிஅமாவாசை தினத்திற்கான உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 29.07.2019 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு முன்பாக தெல்லிப்பளை உபஅலுவலகத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பகிரங்க ஏலம் 29.07.2019 அன்று (திங்கட்கிழமை) முற்பகல் 10.00 மணிக்கு கீரிமலை வாகனத் தரிப்பிடத்தில் நடைபெறவுள்ளது.


**குறிப்பு:**

- சித்திபெற்ற கேள்விதாரர் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும் உற்சவகாலத்துக்குப் பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.
- பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

**திரு. சோ.சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன் துறை (கொல்லன் கலட்டி)**

24.07.2019

## மரண அறிவித்தல்
### திருமதி மேரி றீற்றா லீலா சவுந்தரராஜ்



*தோற்றம் 21.10.1937* — *மறைவு 24.07.2019*

தெணியம்பை வல்வெட்டித்துறையைப்பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி லீலா சவுந்தரராஜ் நேற்று (24.07.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சூசைப்பிள்ளை அழகம்மா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி செபஸ்தியாம்பிள்ளை இராசமணி தம்பதிகளின் மருமகளும் சவுந்த்ர ராஜாவின் (Retired .D.I.T) அருமை மனைவியும் மனோ (UK), சுகிர்தா (Negombo), ஞானவதி (Canada) பொஸ்கோ சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிலிப் மோகன் (USA), காலஞ்சென்றவர்களான மறினா சாந்தினி, சாள்ஸ்றொசான் மற்றும் நொயிலின் வினோதினி (Swiss), எட்வேட் சசிதரன் (குட்டி - கனடா), அன்று றஞ்சிதன் (பபா - Canada) ஆகியோரின் அன்புத்தாயாரும் இந்திரா (USA) டேவிட்பவன் (Swiss), கல்பனா (Canada), ஜெனோவா (Canada) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றொசானி, ஸ்ரெபானி (Swiss), பெஞ்சன், நேத்தன், அட்றியன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை (26.07.2019) வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நடைபெற்று புனித செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தெணியம்பை,**
**வல்வெட்டித்துறை**

**தகவல்: குடும்பத்தினர்.**
**078 823 3754, 0041787002615 (Vinothini)**

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு
29 . 12 . 1977

இறப்பு
23 . 07 . 2019

### திருமதி தெய்வாம்பிகை சண்முகரத்தினம்

*(வைத்திய கலாநிதி தெல்லிப்பழை அரசினர் ஆதார வைத்தியசாலை)*

தொண்டமனாற்றைப் பிறப்பிடமாகவும் யாழ்.கே.கே.எஸ். வீதி சிவலிங்கப்புளியடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வாம்பிகை சண்முகரத்தினம் 23.07.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தொண்டமனாற்றைச் சேர்ந்த சாந்தரத்தினம் தெய்வேந்திரம் (ஓய்வூதியர்) காலஞ்சென்ற விமலாசினி (ஓய்வு பெற்ற இடைக்காடு மகாவித்தியாலய அதிபர்) தம்பதிகளின் புதல்வியும் விஸ்ணுதாசனின்(லண்டன்) சகோதரியும் வல்வெட்டித்துறை அம்பிகைபாகர் குலோதுங்கத்தின் மருமகளும் பருத்தித்துறையைச் சேர்ந்த இரத்தினம் இந்திரலிங்கம் - பத்மாவதி தம்பதிகளின் மருமகளும் சண்முகரத்தினத்தின் (IT விரிவுரையாளர் - கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி) அன்பு மனைவியும் குருபரன், லாவண்யா ஆகியோரின் அன்புத் தாயாரும் பங்கையற்செல்வியின் (லண்டன்) மைத்துனியும் பைரவி, பிரணவி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் ஆறுகால்மடத்து கோம்பயன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**465/A, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(நீலாம்பரி ஹோட்டல் எதிர் ஒழுங்கை)**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 892 8361**

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு
04 . 09 . 1937

இறப்பு
23 . 07 . 2019

### மோசஸ் அன்ரனிப்பிள்ளை (குமார்)

**(ஓய்வுநிலை பொலிஸ் CID இன்ஸ்பெக்ரர்)**


உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கவுண்ஸ்லோ இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட மோசஸ் அன்ரனிப்பிள்ளை (குமார்) 23.07.2019 அன்று நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோசஸ் மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கண்மணி, மனோண்மணி, அழகரட்ணம், பூபாலசிங்கம் மற்றும் அருள்மணி ஆகியோரின் ஆசைச் சகோதரனும், மேரிஅஞ்சலா இராஜதுரை (ஓய்வுநிலை பெரும்பாக உத்தியோகத்தர், கமநல சேவை நிலையம் - நல்லூர், இலண்டன்), Dr. புஸ்பநாதன் (இலண்டன்) ஆகியோரின் ஆசை சின்னையாவும், காலஞ்சென்றவர்களான B.A. பெர்னாண்டோ, S.P.சின்னத்துரை, G.S. பிள்ளை (ஓய்வுநிலை பொலிஸ் இன்ஸ்பெக்டர்) மற்றும் பூமலர், அமராவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்மசீலன் (பயஸ்-ஓய்வுநிலை பொலிஸ் இன்ஸ்பெக்டர்), தங்கத்துரை, றீற்றா சரோஜினி (கனடா), காலஞ்சென்ற றீற்றா றஜனி மற்றும் ஜெயசீலன் (நோர்வே), விஜயசீலன் (ஜேர்மன்), அருட்தந்தை S.A.றொஷான் (முகாமையாளர் - யாழ் புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்), தர்ஷிக்கா (அமெரிக்கா), நிஷாந்தன் (நியூசிலாந்து) ஆகியோரின் ஆசை அங்கிளும், காலஞ்சென்ற அழகேஸ்வரன் மற்றும் அழகேஸ்வரி, அழகேந்திரி, அழகுநாயகி, அழகுராணி, அழகேந்திரன், அழகுரேவதி, லோயிற் சுரேஸ்குமார் (கனடா), புளோறின் சாந்தினி (அமெரிக்கா), இயேசுரன் ரமேஸ்குமார் (கனடா) ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லுடல் உறவினர், நண்பர்களின் அஞ்சலிக்காக நீர்கொழும்பு வெஸ்ரன் மலர்ச்சாலையில் 24.07.2019 காலை 8 மணிமுதல் மாலை 4.30 மணிவரை வைக்கப்பட்டு தொடர்ந்து அன்னாரின் சொந்த இல்லமாகிய "செல்லம்ஸ்" உயரப்புலம் ஆனைக்கோட்டையில் 25.07.2019 முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 26.07.2019 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்திலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-**
**திருமதி. அருள்மணி செபஸ்தியாம்பிள்ளை**
**சகோதரி 077 7209 956**

**மேரிஅஞ்சலா இராஜதுரை பெறாமகள் 076 532 1600**
**அருட்பணி S.A.றொஷான் (ஞானப்புதல்வன்) 077 3043 470**
**தர்மசீலன் (பயஸ்) மருமகன் 071 848 3424**



பிறப்பு
09 . 09 . 1940

இறப்பு
24 . 07 . 2019

### கந்தையா கனகசபை யோகநாதன் - JP

**(உரிமையாளர் சரவணபவன் ஆபரண மாளிகை சாவகச்சேரி,**
**நிறுவுநர் -திருப்புகழ் மண்டபம், மீசாலை)**


குமரகோட்டம், தாமோதரம்பிள்ளைவீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச்சேர்ந்த கந்தையா கனகசபை யோகநாதன் நேற்று (24.07.2019) புதன்கிழமை முருகப்பெருமான் திருவடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா -தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்புமருமகனும்லோகேஸ்வரியின்அன்புகணவரும்காலஞ்சென்றபொன்னம்பலம் மற்றும் செல்வமலர், செல்வராசா, சின்னையா, நவநீதம் காலஞ்சென்ற நீலாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரனும் புவனேஸ்வரி, ஈஸ்வரதாஸ், கமலேஸ்வரி, மனோகரன், இரஞ்சிதரன், ஸ்ரீதரன், பாஸ்கரன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் செந்திமயூரன், திருவேரகன் (லண்டன்), சிவசேந்தன் (லண்டன்), தேவகுஞ்சரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கீதாலக்சுமி, பானுஜா, ரஜினி, விமலச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும் விசாகன், கார்த்திகன், தேசிகன், வர்ஷிகா, ஆதிரன், திட்ஜா, மதுராங்கினி, யோகவிந்தன், விசாகினி, அபிசாகினி, லக்ஜாயினி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.07.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க்ள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குமரகோட்டம், தாமோதரம்பிள்ளை வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**தகவல்: யோ.செந்திமயூரன் (மகன்)**
**077 249 7097**



தோற்றம்
24 . 08 . 1943

மறைவு
23 . 07 . 2019

### செல்லத்துரை வைரமுத்து

**(முன்னாள் உரிமையாளர்- திருப்பதி ஹாட்வெயர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)**

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை - வைரமுத்து நேற்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - திருப்பதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வத்துரை (விதானையார்- 3ஆம் வாய்க்கால், பன்னங்கண்டி, பரந்தன்) சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றிஜிகாந் மற்றும் ரவீந்திரநாத் (பொறியியலாளர்- லண்டன்) மிராளன் (Director of Product Management, Ceymplon Private Limited) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபாலசிங்கம் (லண்டன்), பரராஜசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதர்சனா (கணக்காளர் - லண்டன்), காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மாலினி(லண்டன்), புனிதராணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அஸ்வினி(லண்டன்), விதுஷன்(லண்டன்), நித்திஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் வித்தியா(லண்டன்), யாழினி(லண்டன்), விஜிதா (லண்டன்), றஜீவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2019) வெள்ளிக்கிழமை காலை 10.00மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**138/1, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: மகன் வை. மிராளன்**
**077 244 4162, 021 221 7457**

# Yarl Smart Water Solution (Pvt) Ltd

உங்கள் வீடுகளில் உள்ள கிணற்று நீர் பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமா?

LIFE TIME Service Warranty


SPECIAL OFFER

30 Liters Per Hour

60 Liters Per Hour



250 LPH Water Purification Plant.







Hotline:-
077 057 3684
077 473 9802
077 112 6410

யாழ் மக்களின் நீர்ப்பிரச்சினைகளுக்கு

ஏற்ற முறையில் 5000/- இல் இருந்து நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.

நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....

Head Office:- No.341, K.K.S Road, Jaffna. 021 430 0044


Branch:-Karadippokku Junction, Kilinochchi. 021 430 0045




# நீங்கா நினைவலையில் முதலாம் ஆண்டு

## அமரர் செல்லத்துரை கந்தசாமி

பிறப்பு 14.05.1941 — இறப்பு 04.08.2018



மலர்முகம் கண்டே உள்ளம் கனிந்தோம் - அப்பா
உம் நிழலில் இருந்து வாழ்ந்ததை மறவோம் - அப்பா
நீர் எம் வாழ்வின் வழி காட்டி
பாசம் ஒன்றைத் தவிர வேறென்ன நாம்
தந்தோம் - அப்பா வந்தவர் எல்லாம்
போவது உண்மை விதியென ஒன்று
உண்டென அறிந்தோம் - அப்பா
சிந்தனை எமக்குத் தோன்றிய போதும்
நெஞ்சில் செப்பிட முடியாத்துயரே மோசம் !
உந்தனை இழந்த உணர்வே மிஞ்சும் - என்றும்
உள்ளத்தில் உமது நினைவே துஞ்சும்
வந்தனை செய்வோம் வாழும் வரையில் - எம்
சோகம் சொல்லவும் வார்த்தை இல்லை - அப்பா
எங்ஙனம் எம் அம்மாவின் கண்ணீரில் உங்கள் பிள்ளைகள்
ஆறுமுடியாத சோகம் தான் இங்கே
ஓராண்டு உருண்டு சென்றாலும்
என்றென்றும் மறவோம் உமது காலடித்தடங்களை

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

31/6 அன்பகர் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுகளுடன் :
குடும்பத்தினர்.

075 097 1053 / 021 222 9529

## மரண அறிவித்தல்



### குழந்தை நாகலிங்கம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட குழந்தை நாகலிங்கம் 23.07.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தியேட்டர் ஒழுங்கை,**
**இணுவில் கிழக்கு,**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**T.P: 077 3088 999**


**அரச அலுவலக பாவனைக்கு வீடு/ கட்டடம் தேவை**

அரச அலுவலக பாவனைக்கு உகந்த கட்டடம்/ வீடு வாகன தரிப்பிட வசதியுடன் வாடகைக்குத் தேவை. (C 32641)(14.17)

**077 011 2679/077 324 8920**

## வீடு விற்பனைக்கு

**நல்லூர் செட்டித்தெருவில்.** அதி நவீன வசதிகள் கொண்ட மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
**அரச / அரசசார்பற்ற**
நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

**077 826 7649, 070 446 6748**

## வேலை வாய்ப்பு

சர்வதேச புலவர் திருமண சேவையின் தலைமையகத்தில் பதிவாளர் பதவிக்கு படித்த பெண் பிள்ளைகள் தேவை. கணினி அறிவு அவசியம். தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.

**காலம் : 27.07.2019 சனிக்கிழமை**
**காலை 9.00 மணி**
**இடம் : மதுரகானம், 238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(CS 10351)(14.17)

**தொடர்பு: 077 573 7301**
**071 335 2215**

## பணியாளர்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல நகை வியாபார நிலையத்திற்கு **ஆண், பெண்** பணியாளர்கள் உடன் தேவை.

லலிதா ஜீவலறிஸ்
இல. L.75 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**021 222 2863**


## மரண அறிவித்தல்

**தோற்றம்** 17 . 05 . 1946



**மறைவு** 24 . 07 . 2019

### செல்வராஜா மேரி மெக்டலின்
### (பொன்மலர்)

நவாலி தெற்கு, அரசடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா மேரி மெக்டலின் நேற்று (24.07.2019) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்ராசா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், செல்வராசா (இ.போ.ச. முகாரி) வின் அன்பு மனைவியும், சாம் தவச்செல்வம் (இ.போ.ச - காரைநகர்), ஜோண் அருட்செல்வம் (இ.போ.ச. காரைநகர்), கமலச்செல்வம் (இ.போ.ச. - கோண்டாவில்), அன்ரன் சுகிர்த செல்வம் (பிரான்ஸ்), ஜேக்கப் லக்சன் ஆகியோரின் பாசமிகு தாயும், அல்பிரட், சித்திரா, ரூபன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆன் பிபியானா, றஜனி (தெல்லிப்பழை - ஆதார வைத்தியசாலை), அனுஷில்டா (ஆசிரியர்), ஆன் குலதர்சினி (பிரான்ஸ்), தயானி ஆகியோரின் பாசமிகு மாமியும், நெவின், கெவின், அனுஷ்டன், பிறக்மன், அபினா, யோனா லீசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**இணுவில் கிழக்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**076 803 5095**

## கேள்வி அறிவித்தல்
### வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
### சபை நிதி 2018

01. வலிகாமம் வடக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி புனரமைப்பு, கட்டுமான வேலைகளுக்கு கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றதுகேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வீதி புனரமைப்பு, கட்டட அமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு ,வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:- 0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 25.07.2019 ஆம் திகதியிலிருந்து 08.08.2019 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக் குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 25.07.2019ஆம் திகதியிலிருந்து 08.08.2019 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு ,வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 08.08.2019ஆம் திகதி 14.30மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட-வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 63 (அறுபத்திமூன்று-10.10.2019) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | **NP/14/41(14)/05/CFDR/01/2019** | இன்னாவத்தை கிழக்கு இணைப்பு வீதிப்புனரமைப்பு | 1.167 | 03 மாதம் | **C9andC8** வீதிப்புனரமைப்பு | 12,000.00 | 07.11.2019 |
| 02 | **NP/14/41(14)/05/CFDR/ 02/2019** | கருவேப்புலம் வீதி புனரமைப்பு | 1.410 | 03 மாதம் | **C9andC8** வீதிப்புனரமைப்பு | 15,000.00 | 07.11.2019 |
| 03 | **NP/14/41(14)/05/CFDR 03/2019** | சுதந்திரபுரம் 3ம் குறுக்கு வீதி புனரமைப்பு | 1.320 | 03 மாதம் | **C9andC8** வீதிப்புனரமைப்பு | 14,000.00 | 07.11.2019 |
| 04 | **NP/14/41(14)/05/CFDR 04/2019** | தெல்லிப்பழை புகையிரத நிலைய அருகாமை வீதி புனரமைப்பு | 2.101 | 03 மாதம் | **C8andC7** வீதிப்புனரமைப்பு | 22,000.00 | 07.11.2019 |
| 05 | **NP/14/41(14)/05/CFDR/ 05/2019** | பொன்னையா வீதி புனரமைப்பு(மீள்தாரிடல்) | 0.388 | 03 மாதம் | **C9andC8** வீதிப்புனரமைப்பு | 4,000.00 | 07.11.2019 |
| 06 | **NP/14/41(14)/05/CFDR/06/2019** | பொன்னிப்புலம் வீதி புனரமைப்பு(மீள்தாரிடல்) | 0.297 | 03 மாதம் | **C9andC8** வீதிப்புனரமைப்பு | 3,000.00 | 07.11.2019 |
| 07 | **NP/14/41(14)/05/CFDR/ 07/2019** | வாகனத்தரிப்பிடம் அமைத்தல் - தலைமை அலுவலகம் | 3.942 | 03 மாதம் | **C8andC7** கட்டிடம் | 40,000.00 | 07.11.2019 |
| 08 | **NP/14/41(14)/05/CFDR/ 08/2019** | சேந்தான்குளம் நீர்விநியோக விஸ்தரிப்பு | 1.452 | 03 மாதம் | **C9andC8** நீர் வழங்கல் | 15,000.00 | 07.11.2019 |

11. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 01.08.2019 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை .காங்கேசன்துறை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**திரு.சோ.சுகிர்தன்**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**
**25.07.2019**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

**மண்ணில்** 02 . 12 . 1953



**விண்ணில்** 04 . 08 . 2018


### அமரர் சின்னவன் தங்கராசா
### (தங்கண்ணா)

எங்களது உயர்வுக்காய் என்றுமே உழைத்த
எம்மினிய குடும்பத்து ஒளிவிளக்கே!
இங்கிதமாய் யாம் வாழ ஏற்ற வழி காட்டியின்று
அன்னைகலா வாணிபாதம் பற்றியே சென்றீரே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.31,
செல்வபுரம் வடக்கு,
வவுனிக்குளம்.

என்றும் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய தீர்த்தத் திருவிழா உபயகாரரும் அன்னையின்
பழம்பெரும் தொண்டருமாகிய அன்னையின் அன்பர்

### இரத்தினசபாபதி

அவர்களின் ஆத்மா அன்னை வீரமாகாளியின்
பாதகமலங்களை சரண்புகுந்து சாந்தியமாக இளைப்பாற
வீரமாகாளி தாயாரை பிரார்த்திக்கின்றேன்.

**சாமஸ்ரீ தேசமான்ய**
**இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**
**முதன்மை பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்**
**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்.**

(IN 10765) (14.17)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் -2019

யாழ் மாநகர சபையினால் **02.11.2018** ம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கும், கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமைவாக, இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் **15.08.2019 - 31.12.2019** திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | - | ரூபா 500.00 (வரி நீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - | **26.07.2019 – 08.08.2019** (மு.ப 9.00 - பி.ப 3.00 மணி வரை) |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் | - | **08.08.2019 பி.ப. 3.30 மணி வரை** |
| கேள்விப்படிவம் திறத்தல் | - | **09.08.2019 மு.ப 10.00 மணிக்கு** |

2019 ம் ஆண்டுக்கான கேள்வியில் சித்தி பெற்று 1/3 பணம் செலுத்தாத கேள்விதாரர்கள் மீள் கேள்வியில் சித்தி பெறினும் பரிசீலிக்கப்பட மாட்டார்கள்

மேலதிக நிபந்தனைகள் விண்ணப்ப படிவத்துடன் இணைத்து வழங்கப்படும்.

**மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை**

**இறைச்சிக்கடை குத்தகை - 2019**

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்க கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 21,827.95 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 77,908.99 |
| 3 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 326,986.42 |
| 4 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 299,546.63 |
| 5 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 34,488.16 |
| 6 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 134,325.84 |
| 7 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 119,400.75 |
| 8 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 83,990.96 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 83,953.65 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 74,681.44 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 82,946.21 |
| 12 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 129,475.19 |
| 13 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 22,298.09 |
| 14 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 4,306.82 |
| 15 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 26,902.48 |
| 16 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 197,985.10 |
| 17 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 152,459.83 |


**பொதுச்சந்தைக் குத்தகை 2019**

| தொ. இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் அறிமுகச் சந்தை | 2,000.00 | 3,030.73 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
25.07.2019

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய ஆறாம் திருவிழா உபயகாரரும் அன்னையின் பழம்பெரும் தொண்டருமாகிய அன்னையின் அன்பர்

## வைரமுத்து

அவர்களின் ஆத்மா அன்னை வீரமாகாளியின் பாதகமலங்களை சரண்புகுந்து சாந்தியமாக இளைப்பாற வீரமாகாளி தாயாரை பிரார்த்திக்கின்றேன்.

**சாமஸ்ரீ தேசமான்ஜ இராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**
**முதன்மை பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்**
**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 01 . 1953



இறப்பு 23 . 07 . 2019

## திருமதி இந்திராணி செல்வேந்திரன்

பெரிய கிணற்றடி அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இந்திராணி செல்வேந்திரன் 23.07.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்வேந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா- ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பூபதி தம்பதியரின் அன்பு மருமகளும், அருந்தவராணி, சிவயோகநாதன், ஜெயகுணநாதன், ஜெயவதனா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அழகாதேவி, பாலதர்மன், காலஞ்சென்ற நித்தியானந்தன் மற்றும் அழகநாயகி, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் மற்றும் கமலபத்மினி, லோஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரிய கிண்ற்றடி,**
**அளவெட்டி வடக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# மரண அறிவித்தல்

## ஆறுப்பிள்ளை கதிர்காமதாசன்

(இளைப்பாறிய முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம் - தெல்லிப்பழை)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுப்பிள்ளை கதிர்காமதாசன் நேற்று (24.07.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பத்மராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் அருமைப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான மோசேஸ் (சின்னத்துரை - ஈச்சமோட்டை) மேரித்திரேசா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சாவித்திரி மற்றும் தங்கவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருநேஸ்வரன், அமுதினி, அருள்தாசன், அருந்தவநேசன், அருந்ததி, அனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாஷினி மலர்ச்செல்வன், அன்ரன் நிறைஞ்சனி, சயூரிகா ஆகியோரின் மாமனும், செல்லத்துரை, காலஞ்சென்ற தங்கராசா மற்றும் புளோரா, செல்வராஜா, தேவராஜா, சத்தியவதனி, காலஞ்சென்றவர்களான யோகராணி, தவராஜா, சிவராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆதவன், யாதவன், வர்ஷா, ரேனுஜன், ரேனுயா, கனுஷா, யுவிகரன், கவிநயா, சதுஷ்ரிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.



தோற்றம் 15.10.1941 மறைவு 24.07.2019

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் (அம்பனை தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் அருகில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணி அளவில் தெல்லிப்பழை கொத்தியால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 634 1278, 077 402 0433, 077 517 3995**

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 05 . 1934



மறைவு 24 . 07 . 2019

## திருமதி கனகம்மா கந்தசாமி

மீசாலை மேற்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா கந்தசாமி நேற்று (24.07.2019) புதன்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-அரசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், தவராசா, கனகராசா (கனடா), கனகராணி, தவராணி, துவாரகாதேவி (பிரான்ஸ்), சிவதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், மகேஸ்வரி, நாகலட்சுமி (கனடா), காலஞ்சென்ற பொன்னம்பலம், மகேஸ்வரன், ராஜ்குமார் (பிரான்ஸ்), சுபாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திருமகள், பிரகலாதன், கலைமகள், ஜெயசுதன், சிவசுதன், சுதாஜினி, ஆதவன், மாதவன், சிந்துஜா, சினேகா, சஞ்செய், சஜீக்கா, சனன், சஜீன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்ததலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

**தகவல்:**
**மகன் : தவராசா 077323 1387**
**மகள் : கனகராணி 077 9000 338**

உதயன்

# செய்திகள்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM



## ஸ்மார்ட் லாம் போல் அமைக்க தடை கோரி நீதிமன்றில் மனு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஸ்மார்ட் லாம்ப் போல் கோபுரங்கள் அமைப்பதற்கு தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிப்பேராணை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நவாந்துறை வடக்கைச் சேர்ந்த செல்லப்பர் பத்மநாதன் என்ற 34 வயதுடையவர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் சார்பில் சட்டத்தரணி ரிஷிகேசனி சத்தியநாதன் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதலாவது பிரதிவாதியாகவும் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இரண்டாவது பிரதிவாதியாகவும் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் மூன்றாவது பிரதிவாதியாகவும் எடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிடெட் (Edotco Services Lanka (pvt) LTD) நான்காவது பிரதிவாதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவில் ஸ்மார்ட் லாம் கம்பங்களை நடுவதற்கு முன்னர் 6 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்து அவற்றை நடுவதற்கு ஆராய்ந்து அறிக்கை இடுவதன் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்று சபையில் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அத்தகைய எந்தவொரு குழுவையும் நியமிக்காது மாநகர முதல்வர், தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் கம்பங்களை நடுவதற்கு உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளார்.

அத்துடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் 11.08.2008ஆம் திகதிய 21ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைப்பது தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் திட்டமிடல் குழு ஒன்றை நியமிக்க வேண்டும். அந்தத் திட்டமிடல் குழு தீர்மானங்களை எடுக்கவேண்டும். அந்தச் சுற்றறிக்கையை மீறி ஸ்மார்ட் லாம்ப் போல் கம்பங்கள் நடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ்ப்பாணம் மாநகர முதல்வரும், எடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிட்டெட் நிறுவனமும் 2019.05.15ஆம் திகதி செய்துகொண்ட சட்டவரம்பை மீறிய உடன்படிக்கையை ரத்துச் செய்யும்உறுதிகேள்நீதிப்பேராணை கட்டளை, எடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிட்டெட் நிறுவனத்தால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுவரும் சட்டவிரோத கோபுரங்களை தொடர்ந்தும் அமைக்கக் கூடாது தடைவிதிக்கும் தலையீட்டு நீதிப் பேராணை கட்டளை, எடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிட்டெட்நிறுவனத்தால் அமைக்கப்படும் கோபுரங்களில் 5ஜி தொழிநுட்பத்தைப் பொருத்தஎடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிட்டெட் நிறுவனம் அனுமதி வழங்கக் கூடாது என்ற தலையீட்டு நீதிப் பேராணைக் கட்டளை, எடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிட்டெட் நிறுவனம் இதுவரை அமைத்த கோபுரங்களை அகற்ற யாழ்ப்பாணம் மாநகர சபை, மாநகர முதல்வர் மற்றும் மாநகர ஆணையாளர் ஆகியோருக்கு உத்தரவிடும் ஆணையீட்டு நீதிப்பேராணைக் கட்டளை, மாநகர முதல்வருக்கும் எடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிட்டெட் நிறுவனத்துக்கும் இடையிலான உடன்படிக்கையை இடைநிறுத்தி வைப்பதற்கான இடைக்காலக் கட்டளை, எடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிட்டெட் நிறுவனத்தால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுவரும் சட்டவிரோத கோபுரங்களை தொடர்ந்தும் அமைப்பதை இடைநிறுத்த இடைக்காலக் கட்டளை, எடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிட்டெட் நிறுவனத்தால் அமைக்கப்படும் கோபுரங்களில் 5ஜி தொழிநுட்பத்தைப் பொருத்த எடெற்கோ சேர்விஸ் லங்கா பிரைவெட் லிமிட்டெட் நிறுவனம் அனுமதி வழங்குவதை இடைநிறுத்தும் இடைக்காலக் கட்டளை ஆகிய நிவாரணங்களை மனுதாரர் மனுவில் கோரியுள்ளார்.

(எ-37)

## கசிப்புடன் ஒருவர் நேற்று கைதானார்

*இளவாலையில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடலியடைப்பு இளவாலைப் பகுதியில் நேற்று அதிகாலை கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியால் சென்றவரை இளவாலை பொலிசார் சோதனை செய்தபொழுது 23 லீற்றர் கசிப்புடன் 43 வதுடைய சந்தேகநபரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் பிரான்பற்று பகுதியைச் சேர்ந்தவர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி அவரது வீட்டை சோதனை செய்த பொழுது 688 லீட்டர் கோடா மீட்கப்பட்டுள்ளன - என்று பொலிஸார் மேலும் தெரிவித்தார்.

(ம-26)

## தேங்கிக்கிடந்த தபால் பொதிகள் யாழுக்கு வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 25

கொழும்பில் தேங்கிக்கிடந்த யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தபால் பொதிகள் யாவும் நேற்றுக் காலை தபால் ரயில் மூலம் எடுத்து வரப்பட்டன.

தொழில்சார் போராட்டத்தினால் கொழும்பில் தேங்கிக் கிடந்த பொதிகளே இவ்வாறு தபால் தொடருந்து மூலம் எடுத்து வரப்பட்டன. அவை நேற்றையதினமே உரியவர்களிடம் விநியோகிக்கப்பட்டன என்று தலைமைத் தபாலகம் தெரிவித்தது. (ம-17)

## பொலிஸ் சேவையில் தமிழ் இளைஞர்களை உள்ளீர்ப்பதற்கான நேர்முகத்தேர்வு நிறைவு

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் பொலிஸாருக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில், பொலிஸ் சேவையில் தமிழ் பேசும் இளைஞர்களை உள்ளீர்ப்பதற்கான நேர்முகத் தேர்வுகள் தற்போது நிறைவடைந்தன என்று பொலிஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் கான்ஸ்டபில் பதவிக்கு ஆள் சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் பல்வேறு கட்டங்களாக இடம்பெற்றன. இதில் ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் கலந்து கொண்டனர். ஆரம்பகட்ட நேர்முகத் தேர்வுகள், ஆவண பரிசீலனைகள் அனைத்தும் நேற்று முன்தினத்துடன் நிறைவுக்கு வந்தன. (ம-7)

## திருவாசக அரண்மனையின் பிள்ளையார் சிலை திருட்டு!

*ஒரு லட்சம் ரூபா பெறுமதி எனத் தகவல்*

கொடிகாமம், ஜூலை 25

நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் பிள்ளையார் சிலை திருடப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 3 மணியளவில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. பாதுகாப்பு அலுவலர் முன்பக்கமாக இருந்தார். பின்பக்கமாகவே திருடன் உள்சென்று சிலையைத் திருடிச் சென்றுள்ளான். திருட்டுப்போன சிலை 17 இன்ஞ் உயரமுடையது. அது ஐம்பொன்னால் ஆனது. 80 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் ரூபா வரை குறித்த் சிலை பெறுமதியுடையது - என்று அந்த முறைப்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

## பெரும் பரபரப்புக்கு மத்தியில் நாடு திரும்பினார் கோத்தபாய

*மகிந்த, ப்சிலுடன் தனித்தனியே சந்திப்பு*

கொழும்பு, ஜூலை 25

அரசியல் கட்சிகளுக்கிடையே அரச தலைவர் வேட்பாளர் விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலரும் பொது எதிரணியின் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார் எனக் கூறப்படுபவருமான கோத்தபாய ராஜபக்ச நேற்றுமுன்தினம் இரவு நாடு திரும்பியுள்ளார்.

இருதய அறுவைச் சிகிச்சைக்காகச் சிங்கப்பூருக்குச் சென்றிருந்த அவர், அறுவைச்சிகிச்சையின் பின்னர் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்தார். பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் சிங்கப்பூருக்குச் சென்று அவரைப் பார்வையிட்டு சுகநலம் விசாரித்தனர். மருத்துவ பரிசோதனைகள் முழுமையாக நிறைவடைந்த பின்னரே அவர் நாடு திரும்பியுள்ளார். வழக்கு ஒன்றில் நாளை வெள்ளிக்கிழமை அவர் நீதிமன்றில் முன்னிலையாகவுள்ளார்.

வெளிநாட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற அவருக்கு இந்த மாதம் 24ஆம் திகதிவரை (நேற்று) நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இன்று முதல் விகாரைகளுக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளவுள்ள கோத்தபாய ராஜபக்ச, முக்கிய சந்திப்புகளையும் நடத்தவுள்ளார். குறிப்பாக தனது சகோதரர்களான மகிந்த ராஜபக்ச, பசில் ராஜபக்ச ஆகியோரையும் தனித்தனியே சந்திக்கத் திட்டமிட்டுள்ளார். ஓகஸ்ட் 11ஆம் திகதி முதல் செயற்பாட்டு அரசியலில் குதிக்க வேண்டி இருப்பதால் அதற்கான முன்னேற்பாடு



களில் கோத்தபாயவும், அவரின் சகாக்களும் தீவிரமாக இறங்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-22)

## வெலிக்கடைப் படுகொலைக்கு நியாயம் கோருகிறார் டக்ளஸ்

கொழும்பு, ஜூலை 25

வெலிக்கடைப் படுகொலைக்கு நியாயம் வேண்டும்.

அதற்குச் சாட்சி சொல்ல நான் என்றும் எமது தமிழ்த் தேசிய இனத்தின் சார்பாகத் தயாராகவே இருக்கின்றேன் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா.

குருதி ஜூலையின் வடுக்களையும் வெலிக்கடைப் படுகொலையின் துயர்களையும் நாம் துடைத்தெறிய வேண்டுமாயின் மதிநுட்ப சிந்தனை வழி நின்று சாணக்கியமாகவும் சாதுரியமாகவும் சகல தமிழ்க் கட்சித் தலைமைகளும் உழைக்க வேண்டும். தேர்தல் வெற்றிக்காக அன்றி தமிழர் தேசத்தின் உரிமையின் வெற்றிக்காக ஒன்றுபட வேண்டும். வரலாற்றை நினைவு கூராதவர்கள் மீண்டும் மீண்டும் அவற்றை அனுபவிக்கும்படி சபிக்கப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி,ஜூலை 25
சாவகச்சேரி டிபிஎம்எஸ். கணினிக் கல்வி நிறுவனத்தின் ஏழாவது வருட நிறைவையொட்டிய பயிற்சி நெறிகளை முழுமை செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.
இந்த நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.றுக்சாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினர்க ளாகத் தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவுப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய அதிபர் க.எழிலழகன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம், ஓய்வுபெற்ற அதிபர் வே.சுந்தரலிங்கம், கிளிநொச்சி கல்வி வலய வழிகாட்டலும் ஆலோசனையும் அலகின் அலுவலர் சு.வீரசுதாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9)

### அரசதலைவர் தேர்தலில்

# சஜித் போட்டியிட்டால் தமிழ் மக்கள் ஆதரிப்பர்

### சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 25
தமிழ் மக்களின் விடயத்தை முன்னிறுத்தி அமைச்சர் சஜித் பிரேமதாச அரசதலைவர் தேர்தலில் போட்டியிட வேண்டும். அவ்வாறு போட்டியிட்டால் அவருக்குத் தமிழ் மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள்.



இவ்வாறு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு வட்டுவாகல் சப்தகன்னிகள் ஆலயத்தில் அமையப்பெற்ற சப்தகன்னிமார் அறநெறிப் பாடசாலை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக அமைச்சர் சஜித் பிரேமதாச கலந்துகொண்டிருந்தார். அவர் முன்பாக உரையாற்றுகையில் சிவமோகன் மேலும் தெரிவித்ததாவது:
இந்தமுறை அரசதலைவர் தேர்தல் வேட்பாளர்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாசவும் ஒருவராக இருக்கின்றார். அவர் அரசதலைவர் தேர்தலில் போட்டியிட வேண்டும்.
எமது மக்களுக்கான விடுதலை அதாவது தமிழர்கள் எதிர்பார்க்கும் சுயமதிப்பான அரசியல் தீர்வைத் தருவதற்கு அவர் ஒத்துழைக்க வேண்டும்.
அவர் ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்.
அரசதலைவர் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி சார்பில் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் நபர்களில் முன்னிலையாக இருப்பவரும் சஜித் பிரேமதாசவே. அவர் அந்த தேர்வில் போட்டியாளராக வரவேண்டும் என்று வாழ்த்துகின்றோம். உங்களுக்கு தமிழ் மக்கள் ஆதரவு தருவார்கள்.
தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினை சுயமதிப்பு எந்த இடையூறுகளும் அற்ற ஒரு அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட தமிழ்பேசும் மக்களாக வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலத்தில் வாழ்வதற்கு விரும்புகின்றோம். அதற்காக பெருந்தொகையான உயிர்களைப் பலிகொடுத்துள்ளோம்.
இந்த விடயத்தை முன்னிறுத்தி அரசதலைவர் தேர்தலில் போட்டியிட வேண்டும். அதற்காகத் தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை வழங்குவார்கள் - என்றார். (து-ரி3)

## ரூ. 40 மில்லியனில் இரு வீதிகளுக்கு தார் ஊற்றப்படும்

வடமராட்சி,ஜூலை 25
யாழ்ப்பாணம், வத்திராயன் உடுத்துறை இனைப்பு வீதியான வாரிவிட்டான் வீதியும் ஆழியவளைகொடுக்குளாய் இணைப்பு வீதியும் தார் வீதியாக மாற்றம் செய்யப்படவுள்ளன.
வாரிவிட்டான் வீதியானது சுமார் 24 மில்லியன் ரூபா நிதியிலும், ஆழியவளைகொடுக்குளாய் வீதி 16 மில்லியன் ரூபா நிதியிலும் தார் வீதியாக மாற்றப்படவுள்ளது.
இந்த வீதிகளின் சீரமைப்பு வேலைகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. பருத்தித்துறை பிரதேசசபைத் தவிசாளர்.அரியகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார். (ஐ-70)

## பெருந்திருவிழா

காரைநகர்,ஜூலை 25
யாழ்ப்பாணம், காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் நாள்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.
எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும்,மறுநாள் அடி அமா வாசை தினத்தில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-250)

★ ★ ★ ★

காரைநகர், ஜூலை 25
யாழ்ப்பாணம் காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த தேவி பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.40 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் நாள்கள் நடைபெறவுள்ளன.
எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-250)

## திறந்தவெளி அரங்கமும் ஆசிரிய விடுதியும் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 25
யாழ்ப்பாணம், ஆழியவளை சீ.சீ.த.க.பாடசாலையில் அமைக்கப்பட்ட ஆசிரியர் தங்குமிட விடுதியும், மைதானத்தின் திறந்த வெளியரங்கமும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.
அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தினூடாக ஆசிரியர் தங்குமிட விடுதியும், கிராமிய எழுச்சித்திட்டத்தின் மூலம் மைதான திறந்த வெளியரங்கமும் அமைக்கப்பட்டன.
பாடசாலையின் அதிபர் க.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டு இரண்டையும் திறந்து வைத்தார்.
நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான எஸ்,சுகிர்தன், ரவிகரன், பருத்தித்துறை பிரதேசசபைத் தவிசாளர் ஏ.சி. அரியகுமார், மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-70)

## மிருசுவிலில் வறிய குடும்பத்துக்கு கைகளால் ஓர் ஆழ்துளைக் கிணறு

### இடித்துக் கொடுத்தனர் அலுவலர்கள்

சாவகச்சேரி, ஜூலை 25
மிருசுவில் வடக்கில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பத்துக்கு உபகரணங்களைப் பயன்படுத்தி (கையால் இடித்து) ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் ஒன்றிணைந்து கையால் இடித்து ஆழ்துளைக்கிணறுஅமைத்து வழங்கியுள்ளனர்.
அந்தக் குடும்பத்துக்கு ஏற்பட்ட இதர செலவுகளுடன் அலுவலர்கள் தாமும் உதவிபுரிந்து இந்தக் கிணற்றை அண்மையில் அமைத்துக் கொடுத்துள்ளனர்.
இந்தப் பகுதியில் உள்ள பல குடும்பங்கள் கிணறு வசதிகள் இன்றியுள்ளன. குடிதண்ணீருக்காக அலைந்து வாழ்வதை அவதானித்த அந்தப் பிரிவு பொருளாதார அலுவலர் சக அலுவலர்களுடன் கலந்துரையாடி நிதி சேகரித்து ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கான கருவிகளைக் கொண்டு சென்றுதாமாகவேஇடித்து ஆழ்துளைக் கிணறு அமைத்து வழங்கியுள்ளனர்.
பிரதேச பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள்அண்மையில்வரணி குடமியனில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பத் துக்கு வீட்டுத் திட்டத்துக் கான அத்திபாரம் வெட்டி வழங்கியிருந்தனர். (த-9)

### சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு

## முன்மாதிரிக் கிராமங்களாக சரசாலை, தவசிக்குளம் தெரிவு

சாவகச்சேரி, ஜூலை 25
தென்மராட்சி, சரசாலை தெற்கு மற்றும் கொடிகாமம் தவசிகுளம் ஆகிய கிராமங்கள் வேள்ட் விஷன் நிறுவனத்தினரால் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு முன்மாதிரிக் கிராமங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. சரசாலை தெற்குக் கிராமத்தில் இது தொடர்பாக பொதுமக்களுடன் கலந்துரையாடலை நடத்தியபோது அங்குள்ள பற்றைகள் சிறுவர்களின் சமூகச் சீர்கேட்டுக்கு காரணமாக உள்ளன எனச் சுட்டிக் காட்டப்பட்டது. அதனால் கடந்த வியாழக்கிழமை அந்த இடம் துப்புரவு செய்யப்பட்டது.
பிரதேச செயலகத்தால் துப்புரவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் பிரதேச செயலக அலுவலர்களுடன் கிராம மக்களும் அனைவரும் கலந்து கொண்டு துப்பரவுப் பணியில் ஈடுபட்டனர்.
மக்களின் ஒத்துழைப்பைப் பாராட்டிய பிரதேச செயலகத்தினர் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு தொடர்பாகப் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தனர். (து-9)



## கணித பாடச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 25
க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாட செயலமர்வு கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இருநாள்கள் மாத்தறை என்சல்வத்தை தமிழ் கனிஸ்ட பாடசாலையில் நடைபெற்றது.
சிறகுகள் அமையத்தின் நாணல் செயற்றிட்டத்தினுடாக இந்தச் செயலமர்வு நடைபெற்றது.
குறித்த செயலமர்வுக்கான நிதியுதவியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் மறைந்த தம்பித்துரை பாலகிருஸ்ணனின் நினைவாக அவரின் மாணவர் ஒருவர் வழங்கியிருந்தார். (ஐ-222)

## பதில் முகாமையாளரை தாக்கிப் பணம் பறிப்பு

### - கொடிகாமத்தில் சம்பவம்

கொடிகாமம், ஜூலை 25
வேலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த குடும்பத் தலைவரைத் தாக்கிய இனந்தெரியாத நபர்கள், அவர் கொண்டு சென்ற 37 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த சம்பவம் கொடிகாமம் நாகநாதன் வீதியில் நேற்றுமுன்தினமிரவு 9.40அளவில் இடம்பெற்றுள்ளது.
இதே இடத்தைச் சேர்ந்தவரும் மந்துவில் கிழக்கு கள்ளுத் தவறணையில் பதில் முகாமையாளராகக் கடமையாற்றுபவருமான சி.ரவிக்குமார் (வயது 48) என்பவரே காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இது பற்றிக் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

# நியமனத்தில் திட்டமிட்ட புறக்கணிப்பு: வெளிவாரிப் பட்டதாரிகள் முறைப்பாடு


யாழ்ப்பாணம், ஜூலை 25

**பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் வெளி வாரிப் பட்டதாரிகளைப் புறக்கணித்தமை ஓர் அடிப்படை மனித உரிமை மீறல் என யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணையகத்தில் நேற்று முறையிடப்பட்டுள்ளது.**

வேலையற்ற பட்டதாரிகள் 20 ஆயிரம் பேருக்கு நாடுமுழுவதும் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ள நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி நியமனம் வழங்கும் வகையில் நாடு முழுவதும் உள்ள 16 ஆயிரத்து 800 பேரின் பெயர்ப் பட்டியல் சகல மாவட்டச் செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில் பல்கலைக் கழக உள்வாரிப் பட்டதாரிகள் மட்டும் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றது. பாதிக்கப்பட்ட வெளிவாரிப் பட்டதாரிகளே தற்போது மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் யாழ்ப்பாண இணைப்பாளரிடம் தமது முறைப்பாட்டைக் கையளித்துள்ளனர்.

இந்த விடயமானது அரசமைப்பின் உறுப்புரிமை 12.2 இனை மீறும் செயலாக காணப்படுவதனால் இதற்கான உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் இணைப்பாளர் கனகராஜ்ஜைத் தொடர்பு கொண்டு கேட்டபோது , முறைப்பாடு செய்யப்பட்டதை உறுதி செய்தார். ஆணைக்குழுவின் ஒழுங்கு முறைக்கு உட்பட்டு இது தொடர்பில் தொடர்புடைய அமைச்சிடம் இருந்து அறிக்கையைப் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆராயப்படும் என்றும் தெரிவித்தார். (எ-105)



# சுயநலம் எம்மை பிளவுபடுத்தியுள்ளது

## விக்னேஸ்வரன் தெரிவிக்கிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 25

எம்மிடையேயான ஒற்றுமை, புரிந்துணர்வு யாவும் தேய்ந்து வருகின்றன என்பதைக் காண்கின்றேன். சுயநலம் எம்மைப் பிளவுபடுத்தியுள்ளது என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் மாவட்டப் பணிமனை மட்டக்களப்பு மாமாங்கத்தில் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அதில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மூன்று தசாப்தங்களுக்கு மேலான தமிழர்களின் 'ஆயுதம் தழுவிய உரிமை மீட்புப் போராட்டம் 2009 மே மாதத்தோடு மௌனிக்கப்பட்டு இந்த ஆண்டுடன் பத்தாண்டுகள் நிறைவு பெறுகின்றன. இந்த நிலையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்படாமலும், இனப்படுகொலைக்கான நீதி, போர்க்குற்ற விசாரணை, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, இராணுவத்தின் பிடியில் உள்ள காணிகள் விடுவிப்பு, போர் முடிந்து இராணுவத்தினர் வெளியேறுதல் போன்ற பல விடயங்களில் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் சற்றேனும் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. எம்மவரும் அதுபற்றி அரசுக்கு நெருக்குதல் கொடுக்கவேண்டும் என்ற மனோநிலையில் இல்லை. தமது தனிப்பட்ட நன்மைகளையே தமது பதவிகளை வைத்துப் பெற்றுவர எத்தனித்துள்ளார்கள்.

எமது மக்களுக்கு எதிரான இனப்படுகொலை திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டபோதும் பீனிக்ஸ் பறவை போல புத்துயிர்பெற்று இன்றைய தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தின் முதுகெலும்பாக எம் மக்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் மனித உரிமைகளை கண்காணிப்பதற்கும், ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர், மனித உரிமைகள் சபை மற்றும் ஏனைய மனித உரிமைகள் பொறிமுறைகள் ஆகியவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றும் பொருட்டும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் ஒன்றைஅமைப்பதற்கு இலங்கை அரசு ஐ.நா மனித உரிமைகள் அலுவலகத்துக்கு அழைப்புவிடுக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

இலங்கை விடயம் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் சபை சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்யவேண்டும் எனப் பல தமிழ்க் கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. ஆகவே எமது இந்த வலியுறுத்தல்கள் நடைமுறைக்கு வரும் வகையில் இங்குள்ள தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழ்மக்களும் தமது அரசியல், ராஜதந்திர செயற்பாடுகளை வகுத்துச் செயற்படவேண்டும். அரசுக்கு நெருக்குதல் கொடுப்பதும் எமது நிலையை உலகறியச் செய்து எமது நாட்டின் தலைவர்களை வெட்கித் தலைகுனிந்து தம்மை மாற்றும் ஒரு சூழல் ஏற்படுத்துவதுமே எமது குறிக்கோளாக இருக்க வேண்டும் - என்றுள்ளது. (த)

# யாழ்ப்பாண பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும், அதிகாரசபையும் இணைந்து பண்பாட்டுப் பெருவிழாவை நடத்தவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான சா.சுதர்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனாப் எம்.சேகுராஜீது, யாழ்.கதீஜா பெண்கள் கல்லூரி அதிபர் ஜனாபா ஏ.சி.ஜான்சி, மதிப்புறு விருந்தினராக எழுத்தாளர் கலாபூஷணம் மீரா லெவ்வை லாபீர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் சமர்ப்பண அரங்காக இடம் பெறும் விழாவில் வாத்திய மிருந்தா மீனவ நடனம் கோலாட்டம், யாழ்ப்பாணம் பிரதேச செயலக அலுவலகர்களின் நாடகம் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ்பாடி - 3 கலாசார மலர் வெளியீடு, தேசிய கலை இலக்கியப் போட்டி வெற்றியில் வெற்றி பெற்ற வர்களுக்கான சான்றிதழ் வழங்கல், கலைத்துறை சான்றிதழ் 'யாழ்ரத்னா' விருது வழங்கல் என்பனவும் இடம் பெறவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-135)



# கிராம எழுச்சித் திட்டம் பற்றிக் கலந்துரையாடல்

கொடிகாமம், ஜூலை 25

கிராம எழுச்சித் திட்டம் தொடர்பில் உடுவில் பிரதேச செயலக அலுவலர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது உடுவில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் நிதியொதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் அது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

பிரதேச செயலரின் தலைமையில் நடைபெற்ற சந்திப்பில் வலி.தெற்கு பிரதேசசபை தவிசாளர் தர்சன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-159)

# கண்,காது இலவச பரிசோதனையும், ஒன்று கூடலும்

யாழ்ப்பாணம்,ஜூலை 25

கண் மற்றும் காதுக்கான இலவச பரிசோதனை முகாமும், வடக்கு மாகாண வங்கி ஓய்வு பெற்ற வங்கியாளர் நலன்புரிச் சங்க வருடாந்த ஒன்று கூடலும் நடைபெறவுள்ளன.

நாளைமறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள யாழ்.முற்றம் மண்டபத்தில் முற்பகல் 9.30 மணி தொடக்கம் பரிசோதனை முகாம் நடைபெறும். தொடர்ந்து சங்க ஒன்று கூடல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நல்லூர்த் திருவிழாவில் இம்முறை 60 சிசிரிவி பொருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 25

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தனின் வருடாந்த திருவிழாவின் போது இம்முறை அறுபது வரையான மறைகாணிகளை(சிசிரிவி) பொருத்த யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த மறைகாணிகள் யாவும் ஆலய சுற்றாடலில் பொருத்தி வைக்கப்படும் என்று மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். ஆலய சுற்றாடலில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவும் மற்றும் இரத நடவடிக்கைகளை கண்காணிக்கும் முகமாகவும் இந்த மறைகாணிகள் பொருத்தப்படவுள்ளன.

கடந்த வருட ஆலயத் திருவிழாவின் போது முப்பது வரையான மறைகாணிகள் பொருத்தப்பட்டன. இதன் மூலம் கடந்த வருடம் பெரும் குற்ற செயல்கள் குறைந்து காணப்பட்டன. (ஐ-17)

# ஆசிரிய நியமனம் பெற்ற தொண்டர்களும் இடமாற்றம்கோரி அமைச்சுக்கு அலைச்சல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடக்கு மாகாணத்தில் அண்மையில் நிரந்தர அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்ட ஆசிரியர்கள் தங்கள் வீடுகளுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரி தினமும் மாகாணக் கல்வி அமைச்சுக்குப் படையெடுக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள் என்பதன் அடிப்படையில் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி ஆயிரத்து 117 பேருக்கு ஆசிரிய நிரந்நர நியமனம் வழங்கப்பட்டது. இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டவர்களில் 378பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் குறைந்தது 3 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் என்ற அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் பணியாற்றிய பாடசாலைகள் பலவற்றிலும் தொண்டராசிரியர்கள் கற்பித்த பாடங்களுக்கு நிரந்தர நியமனத்திலுள்ள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர். அதனால் அத்தகைய பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடம் இல்லாததால் மாவட்டத்தில் தேவையுள்ள பாடசாலைகளுக்கு தொண்டராசிரியர்களாக இருந்தவர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

தத்தம் வீடுகளிலிருந்து அதிக தூரத்திலுள்ள பாடசாலைகள் நியமனத்தில் அமைந்துவிட்டன என்பதால் போக்குவரத்து நெருக்கடி, தங்குமிட நெருக்கடி என்பனவற்றுடன் குடும்ப நெருக்கடி நிலையையும் எதிர்கொள்கின்றோம் என்று கவலை தெரிவிக்கும் அவர்கள், தமக்கு அண்மித்த பாடசாலைகளைக் கோரி மாகாண கல்வி அமைச்சை நாடுகின்றனர். எனினும், குறித்த நியமனம் சிறப்பு நியமனம் என்ற வகையில் எந்தவகையிலும் இடமாற்றம் வழங்க முடியாது என்று கல்வி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்களில் அதிகம் பேர் யாழ்ப்பாண மாவட்டத்தைச்சேர்ந்தவர்கள்.

பிற மாவட்டங்களில் பணி புரியும் அவர்களும் தமது சொந்த மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யும்படி கோரிக்கை விடுத்து வருகின்றனர். (த-105)

# தட்சணாவடலி முதலாம் ஒழுங்கை சீரமைப்பு

கொடிகாமம், ஜூலை 25

யாழ்ப்பாணம் சுன்னாகம் தட்சணாவடலி முதலாம் ஒழுங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம எழுச்சி திட்ட நிதியினூடாக இந்த வீதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. (ஐ-159)

# தொல்பொருள் திணைக்களத்தின் செயல் இந்துக்களுக்கு அதிர்ச்சி

## ஆறுமுக நாவலர் சபை அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுப் பகுதியில் சைவ அடையாளங்களைத் திட்டமிட்டு மறைக்க முனையும் தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகளும், அதனை எதிர்த்து தமிழர் கூடியபோது, தவத்திரு தென்கயிலை ஆதீன குருமுதல்வர் மேல் விசமிகள் சுடுதேநீர் ஊற்றியமையும் சைவமக்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ள கொழும்பிலுள்ள சிறிலசிறி ஆறுமுகநாவலர் சபை, கடும் கண்டனமும் தெரிவித்துள்ளது.

இது பற்றி சபை அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் நிலவிவரும் பல்வேறுபட்ட அசாதாரண சூழ்நிலைகளின் மத்தியில் தமிழ் மக்கள் வேதனை கொள்ளுமளவுக்கு முல்லைத்தீவில் நீராவியடி, செம்மலைப் பிள்ளையார் கோவிலில் சைவ மக்களின் வழிபாடுகளுக்கு ஏற்பட்டுள்ள இடைஞ்சல்கள், நத்திக்கொடியை கழற்றி வீசி பௌத்த துறவியர் மேற்கொண்ட அநாகரிகமான நடவடிக்கைகளும் இந்து மக்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

பௌத்த - சைவ உறவை வலுப்படுத்த அரசியற் தலைவர்களும் சமயத் தலைவர்களும் முன்வர வேண்டும்.

சைவமக்களினுடையஎதிர்பார்ப்புக்களை நன்குணர்ந்து கடமையாற்றும் இலங்கை இந்து மத கலாசார அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசனின் செயற்பாடுகளை வரவேற்கின்றோம். காலத்துக்கு ஏற்றாற்போல் தக்க நடவடிக்கைகளை உரியநேரங்களில் எடுத்து இந்தப் பணியில் முன்னின்று இந்துமத கலாசார அலுவல்கள் அமைச்சரெனும் வகையில் சைவசமய அடையாளங்களை அவர் காத்திட வேண்டும் - என்றுள்ளது. (த)





### சீரமைக்கப்பட்ட வீதி மக்கள் பாவனைக்கு

கொடிகாமம், ஜூலை 25

யாழ்ப்பாணம் அச்சுவேலி அரசடி முதலாம் ஒழுங்கை சீரமைக்கப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் கிராம எழுச்சி திட்ட நிதியினூடாக இவ் வீதி சீரமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி. கிழக்கு பிரதேசசபை தவிசாளர் தி.நிரோசன், வலி. கிழக்கு பிரதேசசபை உபதவிசாளர் ம.கபிலன், வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் இ. செல்வராஜா, சி.அகீபன், அ. உதயகுமார், கிராம ஆலுவலகர் கோபாலதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)

# நவீன இயந்திர மயமாதலுக்குள் விவசாயிகள் செல்லவேண்டும்!

## விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்து



முல்லைத்தீவு, ஜூலை 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் வெளிநாடுகளைப் போல் இயந்திரமயமாக்கலுக்குள் செல்லவேண்டும். அவ்வாறு செல்லும்போதுதான் நெற்செய்கையின் உற்பத்திச் செலவைக் குறைக்கலாம் இலாபம் ஈட்டலாம் என்று வடக்கு மாகாண விவசாயப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.உகநாதன் தெரிவித்தார்.

தற்போது விவசாயிகள் எதிர்கொள்ளும்பிரச்சினைகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் நெற்பயிர்ச் செய்கையில் முன்னைய காலங்களில் ஏக்கருக்கு முப்பது புசல் நெல் அறுவடை செய்தார்கள்.

வளர்ந்துவரும் வசதிவாய்ப்புகளுக்கு ஏற்றாற்போல் இலங்கையில் தற்போது ஏக்கருக்கு இருநூறு புசல் நெல் அறுவடை செய்கின்றார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பயிர் செய்கை முறையில் இன்னும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

நெற்பயிரின் சராசரி விளைச்சல் 90 புசலாகவே காணப்படுகின்றது. இதற்கு மேல் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை இருக்கின்றது. இருந்தபோதிலும் அம்பாறை, திருகோணமலை மற்றும் ஏனைய மாவட்டங்களில் ஒரு ஏக்கருக்கு 160 புசல் நெல் எடுக்கின்றார்கள். ஆனால் செலவு ஒன்றாக இருக்கின்றன.

### கிழக்கில் சிறப்பு

கிழக்கில்நீர்ப்பாசனங்களில்களை கட்டுப்பாட்டில் சீராக விவசாயச் செய்கையை மேற்கொள்வார்கள். அதே வேளை தற்போது இயந்திர மயமாக்கலில் அதிகளவில் ஈடுபடுத்துகின்றார்கள்.

தற்போது விவசாய செய்கையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு செல்கின்றது.

தற்போது இருக்கின்ற தொழில் செய்யக்கூடிய இளைஞர்களும் விவசாயத்துறையில் நேரடியாகக் களத்தில் இறங்கி வேலை செய்வதற்கு ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் நாங்கள் கட்டாயமாக வெளிநாடுகளைப் போல் இயந்திரமயமாக்கலுக்குள் செல்ல வேண்டும்.

அவ்வாறு செல்லும்போது தான் நெற்செய்கையின் உற்பத்திச் செலவைக் குறைத்து இலாபத்தை அதிகரித்துக்கொள்ள முடியும் - என்றார். (த-ரி3)

# யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பெருவிழாவும் ஆய்வரங்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார திணைக்களங்களின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும் மாவட்ட கலை கலாசார பேரவையும் மாவட்ட அதிகார சபையும் இணைந்து ஆய்வரங்கும் பண்பாட்டுப் பெருவிழாவையும் நடத்தவுள்ளன.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நாளையும், மறுதினமும் நடைபெறவுள்ளன.

நாளை முற்பகல் 9 மணிக்கு மறைந்த கவிஞர் இ.முருகையன் அரங்கில் நடைபெறும்.

ஆய்வரங்கில் வரவேற்புரையை நல்லூர் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகமும், அரங்கத் திறப்புரையை யாழ்ப்பாண தமிழ்ச் சங்கத் தலைவர் ச.லலீசனும் நிகழ்த்துவர்.

யாழ்ப்பாண மாவட்ட கலை கலாசார பேரவையின் உபதலைவர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் யாழ்ப்பாணத் தமிழர் வாழ்வியற் ப்ண்பாட்டுச் சுவடுகள் என்னும் தலைப்பில் ஆய்வரங்கு நடைபெறும்.

ஆய்வரங்கில் "யாழ்ப்பாணத்து வாழ்வியலில் வீடு இனவரையியல் பகுப்பாய்வு" என்னும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கனும், "யாழ்ப்பாணத் தமிழர் வாய்மொழி இலக்கியங்கள்" என்னும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவ லிங்கராஜாவும்,"யாழ்ப்பாணத் தமிழர் கிராமிய வழக்காறுகளில் தொட்டுணரா சடங்குகளின் வகிபாகமும் நிலைமாறு காலத்தில் அதன் இருப்பும்" என்னும் தலைப்பில் தென்மராட்சி பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் செல்வி சிவச்செல்வி சிவலோகநாதனும், "யாழ்ப்பாணத் தமிழர் பாரம்பரிய ஆடை அணிகலன்களும் பின் காலனித்துவ சூழலும்" என்னும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை இந்துக் கற்கைகள் பீட விரிவுரையாளர் தி.செல்வமனோகரனும், "யாழ்ப்பாணத்துப் பண்பாட்டின் சிறப்படையாளமாக மடங்கள்" என்னும் தலைப்பில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் திருமதி குமுதா உமாகாந்தனும் உரையாற்றுவர். நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணமாவட்டச் செயலரும் மாவட்ட கலை கலாசார பேரவையின் தலைவருமான நா.வேதநாயகன் தலைமையில் பண்பாட்டுப் பெருவிழா நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் இ.இளங்கோவன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், புனைகதை இலக்கிய படைப்பாளி கா.சச்சிதானந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் நடனம், தனிப்பாடல் ,வாழ்த்துமடல் வெளியீடு, நாடகம் கலை மன்றங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட ஆற்றுகைப் போட்டிகள் மற்றும் தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கல், கிராமிய நடனம் மாவை பொதுச் சேவைக் கழகம் வழங்கும் சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் ,2019 ஆம் ஆண்டுக்கான இளங்கலைஞர் விருது வழங்கல், 2019 ஆம் ஆண்டுக்கான யாழ்.முத்து விருது வழங்கல் போன்றவை இடம்பெறவுள்ளன.(ஐ-9)

# நான்கு மயானங்கள் சீரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 25

வலிக்காமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட நான்கு மயானங்கள் சீரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளதாக சபையால் தெரிவிக்கப்பட்டது.

சபை எல்லைக்குட்பட்ட மயானங்களை சீரமைக்க வேண்டிய தேவை அதிகம் உள்ளது. மயானத்தின் எரி கொட்டகைகளைச் சீரமைத்தல்,பாதுகாப்பான எல்லை அமைத்தல், மடங்களைச் சீரமைத்தல், பற்றைகளை அகற்றுதல்,மயானத்துக்கான பாதை சீரமைப்பு போன்ற பல்வேறு வேலை திட்டங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம் அராலி தெற்கு ,கிழக்கு மயானங்கள் 29 லட்சம் ரூபா செலவிலும்,நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் முயற்சியால் மீள் குடியேற்ற அமைச்சின் நிதியின்கீழ்பொன்னாலை,அராலிவடக்கு மயானம் ஆகியன 8 லட்சம் ரூபா செலவிலும் சீரமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியமனம் கிடைக்க நடவடிக்கை

## கூட்டமைப்பு எம்.பி. அடைக்கலநாதன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 25

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பில் நாம் அரசுடன் பேசுவோம் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஐயங்கன்குளம், பாபு முன்பள்ளியில் கடந்த 19ஆம் திகதியன்று சிறுவர் பூங்கா திறப்பு விழா நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றைய ஆசிரியர்களை விட கூடுதலாகப் போற்றப்பட வேண்டியவர்கள். ஏனெனில் எந்த ஒரு ஊதியமும் சரியான முறையில் கிடைக்காது, தமது சொந்தப் பணத்தில் சேவையற்ற வருகின்றவர்களே முன்பள்ளி ஆசிரியர்கள். அவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைப்ப தற்கான வழி பிறக்க வேண்டும். அதற்கு நாம் தொடர்ந்து குரல்கொடுத்து வருகின்றோம். நிச்சயமாக அவர்களுக்கொரு நிரந்தர நியமனம் கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குகின்ற செயற்றிட்டங்கள் தொடர்பில் நாம் பேசுவோம். முன்பள்ளி ஆசிரியர்களை நிரந்தரமாக்க முடியாத ஒரு சூழலிலே என்னுடைய மன வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (த-246)

# போக்குவரத்து விதிகளை மீறிய சாரதிக்கு ரூ.76 ஆயிரம் தண்டம்

வவுனியா,ஜூலை 25

மது போதையில் ஆவணங்களின்றி உந்துருளி செலுத்தியவருக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றால் 76 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பகுதியில் வைத்து மது போதையில் உந்துருளியில் காப்புறுதிப் பத்திரம், வரிப் பத்திரம் இன்றி பயணித்த குற்றச்சாட்டில் கடந்த திங்கட்கிழமை வவுனியாப் பொலிஸாரால் இவர் கைது செய்யப்பட்டார். குறித்த நபரைநேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்திய போது 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் 76 ஆயிரம் ரூபாவை குற்றப் பணமாகச் செலுத்த நீதிமன்று உத்தரவிட்டது. (ஐ)



## வவுனியாவில் முன்பள்ளி திறப்பு

வவுனியா,ஜூலை 25

வவுனியா தாஸ்நகரில் மாணவர்களின் கல்வித்திறனை அதிகரிக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட விபுலானந்த முன்பள்ளி நேற்று முற்பகல் 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.
வடக்கு மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட 20 லட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதனால் திறந்துவைக்கப்பட்டது.
நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வினோநோதாரலிங்கம், வவுனியா முன்பள்ளி பாடசாலைகளின் கோட்ட இணைப்பாளர் திருமதி ப.சசிகலா, மகாறம்பைக்குளம் அ.த.க பாடசாலையின் அதிபர், கிராம அபிவிருத்தி சங்க உபதலைவர் மற்றும் முன்பள்ளி பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## யானைகளை விரட்டியடிக்க 2 வெடிகள் போதாதுள்ளன

### அதிகளவில் வழங்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 25

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் ஓர் இரவில் சுமார் நான்கு தடவைக்கு மேல் காட்டுயானைகள் வயல் நிலத்துக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்கின்றன.
வனஜீவராசிகள் திணைக்களம் கொடுக்கும் இரண்டு வெடிகள்ஒருஇரவுயானைக் காவலுக்கு போதாதுள்ளன.
வயல் காவலுக்கு நிற்கும் நாங்கள் இரண்டு வெடிப் பெட்டிகளைவாங்கிக்கொழுத்தியே யானைகளை விரட்ட வேண்டியுள்ளது. எனவே வெடிகளின் எண்ணிக்கையை அதிகரித்து வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.
கிராம அலுவலரின் கடிதத்துடன் செல்லும் விவசாயி ஒருவருக்கு இரண்டு யானை வெடிகளைமாத்திரம்வனஜீவராசிக்ள் திணைக்கள அதிகாரிகள் வழங்குகின்றனர்.
ஒரே இரவில் இரண்டு வெடிகள் தமக்குப் போதாமலுள்ளன. அந்தளவுக்கு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
தற்போது சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே யானை வெடியின் எண்ணிக்கையை அதிகரித்து வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.
முல்லைத்தீவுமாவட்டம்ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள வனஜீவராசிகள் திணைக்களத்தில் நாளாந்தம் சராசரி 40 விவசாயிகள் யானை வெடிபெற்றுச்செல்கின்றனர் என்று வனஜீவராசிகள் திணைக்களத்தி னர் தெரிவிக்கின்றனர். எனினும் அந்த எண்ணிக்கை போதாமலுள்ளது. அதனாலேயே யானை வெடிகளை அதிகரித்தளவில் வழங்குமாறு கோருகின்றோம் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-ரி3)



## தேவையானளவு எண்ணெய் பெறுவதில் புதுக்குடியிருப்பு மீனவர்கள் இடர்பாடு

முல்லைத்தீவு,ஜூலை25

முல்லைத்தீவு வீதியில் நிலைகொண்டுள்ள வெளி மாவட்டக் கடற்றொழிலாளர்கள், மிக அதிகளவில் மண்ணெண்ணெயைக் கொள்வனவு செய்வதால், உள்ளூர் கடற்றொழிலாளர்களும் பொது மக்களும் மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
புதுக்குடியிருப்பு எரிபொருள் நிலையத்துக்கு, குறித்த வரையறை அளவுள்ளமண்ணெண்ணெயே கொழும்பிலிருந்து எடுத்துவரப்படும் நிலையில், சாலைப் பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள், வாகனங்களில் வந்து பரல் கணக்கில் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்கின்றனர்.
அதனால் உள்ளூரில் மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு நிலவுகிறது.
இதனால் மக்கள், கிளிநொச்சி - பரந்தன் எரிபொருள் நிலையத்துக்கே செல்லவேண்டி உள்ளதாகவும் முல்லைத்தீவின் கரைதுறைப்பற்று எரிபொருள் நிலையத்தினூடாக, சுமார் 18 ஆயிரம் லீற்றர் வரையானமண்ணெண்ணெய்க்கு கேள்வி நிலவுகின்ற போதிலும், 6 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணெய் மாத்திரமே அங்கு கொண்டுவரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே, கரைதுறைபற்று, புதுக்குடியிருப்பு எரிபொருள் நிலையங்களுக்கு, கூடுதலான மண்ணெண்ணெயை விநியோகம் செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்க் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-ரி3)



## ஈருருளி கையளிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 25

முள்ளியவளையைச் சேர்ந்த வறுமைக்கு உட்பட்ட மாணவி ஒருவருக்கு ஈருருளி வழங்கி வைக்கப்பட்டது.
முல்லைத்தீவு, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ரவிக்குமார் தாரணி என்ற மாணவிக்கே இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது.
'கல்விக்குக் கரம் கொடுப்போம்' எனும் திட்டத்தின் ஊடாக லண்டனில் வசிக்கும் கந்தப்பிள்ளை திலீபன் மற்றும் எம்.ஹர்வேய் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் சிவம் அறக்கட்டளை ஊடாக வழங்கப்பட்டது. (ஐ-222)

## கரைதுறைப்பற்றுக் குழுக் கூட்டமே முல்லையில் இனி முதலில் நடக்கும்

முல்லைத்தீவு, ஜூலை 25

முல்லைத்தீவு மாவட்டத்தில், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டமே எதிர்காலத்தில் முதலாவது கூட்டமாக இடம்பெறும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கரைதுறைப்பற்றுப் பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டம் கடந்த 18ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதில் மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.
இதுவரை நாள்களும் முதலாவது அபிவிருத்திக் குழுக்கூட்டம் புதுக்குடியிருப்பிலும், இரண்டாவது கரைதுறைப்பற்று, மூன்றாவதாக ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் என்னும் ஒழுங்கில், ஒரே நாளில் அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் இடம்பெற்று வந்தன.
எனினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக சனத்தொகை கூடிய பிரதேசமாக கரைதுறைப்பற்று காணப்படுகின்றது. இந்தப் பிரதேசத்தில் அதிக பிரச்சினைகள் நிலவுகின்றன. அபிவிருத்திக் குழுக் கூட்டத்தைக் கரைதுறைப்பற்றில் முதலாவதாக நடத்துவதன் மூலமாக பிரதேச மக்களின் பிரச்சினைகளை நிறைவாக ஆராய முடியுமென்று பிரதேச சபைகளின் சில உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
அதற்கிணங்க எதிர்வரும் காலங்களில் கரைதுறைப்பற்று அபிவிருத்திக் குழுக் கூட்டம் முதலாவதாக இடம்பெறுமெனத் தீர்மானிக்கப்பட்டது.
இந்த நிலையில், ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் மூன்றாவதாக காலதாமதமாகி இடம்பெறுவதோடு, எப்போதும் குறுகிய நேரமே குறித்த கூட்டம் இடம்பெறுகின்றது. ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுவில் நிறைவாக பிரதேசத்தின் குறைபாடுகள் ஆராயப்படுவதில்லை எனத் தெரிவித்து, ஒட்டுசுட்டான் பிரதேச பொதுமக்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர், கடந்த 18ஆம் திகதி இடம்பெறவிருந்த அபிவிருத்திக் குழுக்கூட்டத்தைப் புறக்கணித்திருந்தனர்.
ஒட்டுசுட்டான் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் அன்றையதினம் இடம்பெற்றிருக்கவில்லை. (த-246)



## முன்பள்ளிக்கு உபகரணங்கள் வழங்கிவைப்பு

வவுனியா,ஜூலை 25

வவுனியா, மறவன்குளம் முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.
இந்த உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. தமிழ் விருட்சம் அமைப்பின் ஏற்பாட்டில் பிரான்ஸ் நாட்டில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவான திருமதி தே. தேவராணியின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரின் நிதியுதவியின் மூலம் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ)

### குறிப்பிட்ட மாதங்களின் பின்னர்

## முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துள்ளது

முல்லைத்தீவு, ஜூலை 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பிட்ட மாதங்களாக வறட்சி நிலவியநிலையில், நேற்றுமுன்தினம் மாலை கடும் மழை பெய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
வறட்சியால் மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.
பல குளங்கள் வற்றியுள்ளன. இந்த நிலையில் சுமார் இரண்டு மணிநேரம் மழை பெய்துள்ளது.
முள்ளியவளை, வற்றாப்பளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு நகரம், புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், உடையார்கட்டு சுதந்திரபுரம், விசுவமடு மற்றும் மன்னாகண்டல் பகுதிகளில் கடும் மழை பெய்தது.
அதனால் மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டபோதும் மழை பெய்ததால் பெரு நன்மை என்று கூறி மகிழ்ச்சியும் தெரிவித்தனர். (த-ரி3)



# முல்லையில் மீன்வாடி அமைக்கும் விதிகளில் இனிமேல் இறுக்கம்

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

முல்லைத்தீவு, ஜுலை 25

முல்லைத்தீவு மாவட்டத்தில், பிரதேசசபை மற்றும் பிரதேசசெயலகம் ஆகியவற்றின் அனுமதியுடனேயே இனி மீனவர்களுக்கான வாடி அமைக்க முடியுமென்று கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான முதலாவது கரைதுறைப்பற்றுப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த 18ஆந் திகதியன்று நடைபெற்றது.

அதில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள மீனவர் வாடிகள் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார். இது பற்றி நீண்ட நேரமாக இடம்பெற்ற பலரின் கருத்துகளையடுத்து, பிரதேசசபை மற்றும் பிரதேச செயலகம் என்பவற்றின் அனுமதி பெறப்பட்டே இனி வாடிகள் அமைக்கப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வெளிமாவட்ட மீனவர்களின் வருகையைக் குறைக்கும் வகையிலும், வெளிமாவட்டத்திலிருந்து வந்து சட்டவிரோதமாக வாடி அமைத்து தொழில் புரிபவர்களின் வாடிகளை அகற்றும் நோக்கிலுமே இவ்வாறானதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, பிரதேசசபை மற்றும் பிரதேச செயலக அனுமதியின்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வாடிகளை அகற்றும்போது போலிஸார் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (த-246)

# வருடாந்த திருவிழாவும் சமயப் போட்டிகளும்

யாழ்ப்பாணம்,ஜுலை 25

யாழ்ப்பாணம் கோண்டாவில் கேணியடி காளி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமைதீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும்.

இதேவேளை நாளைமறுதினம் சனிக்கிழமை மாணவர்களுக்கான சமய அறிவுப் பரீட்சை, கோலம், தோரணம் கட்டல் போட்டிகள் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# முத்தையன்கட்டு இடதுகரை வீதி சீரமைப்பு

மன்னார்,ஜுலை 25

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இடதுகரை வீதியை 25.5 மில்லியன் ரூபா செலவில் தார்வீதியாக சீரமைக்கப்படவுள்ளது.

கிராமிய வீதிகளை தார் இட்டுசீரமைக்கும்வேலைத் திட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனால் இந்த வீதி சீரமைப்பு செய்யப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பப் பணிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முத்தையன்கட்டு வலது கரை வீதியானது என்றும் அபிவிருத்தி காணாத பிரதேசம். பாரம்பரிய விவசாய கிராமமாக காணப்படும் இப்பகுதி மக்கள் தங்களது உற்பத்திப் பொருள்களை மிகவும் சிரமத்துடன் சந்தைப்படுத்தி வருகின்றனர். தற்போது இந்த வீதியானது சீரமைக்கப்படுவதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைதவிசாளர் பிரேமகாந், உறுப்பினர்கள் தில்லை நடராசா, சத்தியசீலன், இ. சந்திரரூபன், முத்தையன் கட்டு வலதுகரை மகாவித்தியாலய அதிபர் நாகேந்திர ராசா, வன்னி குரோஸ் கலாசார பேரவை தலைவர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஜ-213)

# நீண்டகால இடப்பெயர்வுத் திட்டத்துக்குள் கரைதுறைப்பற்றுக் கிராமத்தவர் உள்ளீர்ப்பு

## பிரதேச செயலர் உறுதியளித்தார்

முல்லைத்தீவு, ஜுலை 25

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராம மக்கள் நீண்டகால இடப்பெயர்வுத் திட்டத்துக்குள் இந்த வருடம் உள்வாங்கப்படுவார்கள் என்று கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் திருமதி உமாமகள் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புற தமிழ்க் கிராமங்களான கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் போன்ற கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் 1984ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்திருந்தனர்.

இருப்பினும் நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்கள் என்னும் திட்டத்துக்குள் இவர்கள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்கள் என்னும் திட்டத்தினுள் 1990ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்தவர்களான நீராவிப்பிட்டி, ஹிச்சிராபுரம் போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களே உள்வாங்கப்பட்டிருந்தனர்.

நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்கள் என்னும் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு, இந்தத் திட்டத்துக்குள் பொறுப்பாக இருந்த அமைச்சரான, ரிஷாட் பதியுதீனால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு சிறப்புக் கொடுப்பனவுகளும்வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், கரைதுறைப் பற்றுபிரதேசசபைஉறுப்பினர் கி.சிவலிங்கம் இது தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

இந் நிலையில் அதற்குப் பதிலளித்தபோதே கரைதுறைப் பற்று பிரதேசசெயலர் திருமதி.மணிவண்ணன் உமாமகள், இந்த வருடம் குறித்த கிராமங்களும் நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்களும் திட்டத்துக்குள் உள்வாங்கப்படுவர் என்று தெரிவித்தார். (த-246)

# யாழ்ப்பாணக் கோட்டை அந்தோனியார் சிலை விசமிகளால் உடைப்பு

## சில மீற்றர் தூரத்திலேயே யாழ். பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், ஜுலை 25

யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த புனித அந்தோனியாரின் திருச்சொரூபம் நேற்றுமுன்தினம் இரவு மர்ம நபர்களால் உடைக்கப்பட்டுள்ளது. குறித்த சொரூபத்துக்கு சில மீற்றர்கள் தூரத்திலேயே யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மக்களின் வணக்கத்துக்குரிய கடவுள்களின் சிலைகள் உடைக்கப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கடந்த ஜுன் மாதம் 17ஆம் திகதி யாழ்ப்பாணம் மணியம்தோட்டம் பகுதியில் இருந்த மாதா சொரூபம் அடையாளம் தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டது. மீன்பிடித் தொழிலுக்காக அந்தப் பகுதிக்கு வந்த சிலர் சொரூபம் உடைக்கப்பட்டிருப்பதை கண்டு பொலிஸாருக்கும், பிரதேச வாசிகளுக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

மண்டைதீவு சந்தியில் அமைக்கப்பட்டிருந்த புனித பேதுருவின் சிலை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டது. தற்போது புனித அந்தோனியாரின் சிலை உடைக்கப்பட்டுள்ளமை கிறிஸ்தவ சமூகத்தின் மத்தியில் கடும் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ம-7)

# பொதுக் கூட்டம்

வடமராட்சி,ஜுலை 25

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச கலாசார அதிகாரசபையின் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கலைஞர்கள், கலை மன்றங்களின் பிரதிநிதிகள், கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார். (ஐ)

# குடிதண்ணீர் பெறுவதில் தங்கபுரம் மக்கள் இடர்பாடு

## பிரதேசசபை நடவடிக்கைபோதாது என்கின்றனர்

முல்லைத்தீவு, ஜுலை 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக அளம்பில் தெற்குப் பிரதேசத்தில் உள்ள தங்கபுரம் கிராம மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

கடல் மட்டத்திலிருந்து உயர்ந்த நிலப் பரப்பைக் கொண்ட தங்கபுரம் பகுதியில் சுமார் 60 அடிக்கு மேல் கிணறுகளைத் தோண்டியும் தண்ணீர் இல்லை என்று தெரிவிக்கின்றனர்.

ஐந்து குடும்பங்களுக்கு ஒரு பொதுக் கிணறு என்று ஐந்து இலட்சம் ரூபாவரையில் செலவு செய்து கிணறு தோண்டிக்கட்டியபோதும் கிணற்றில் தண்ணீர் இல்லை எனறு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்குப் பிரதேச சபையினர் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக்கொடுத்தபோதும் சரியான முறையில் தண்ணீர் கிடைப்பதில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

தங்கபுரம் பகுதியில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. சில குடும்பங்கள் வசதியுள்ளவை. அந்தக் குடும்பங்கள் 150 அடி ஆழத்தில் ஆழ்துளைக்கிணறுகளை அமைத்துள்ளார்கள். அவர்களின் கிணற்றில்தான் தண்ணீர் பெற்றுக் கொள்கின்றோம்.

இவ்வாறு எவ்வளவு காலத்துக்குத் தான் அவர்கள் தண்ணீரை மற்றவர்களுக்குக் கொடுப்பார்கள்? என்ற நிலையில் வாழ்ந்து வருகின்றோம் என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆண்டுதோறும் வறட்சி ஏற்படும் காலங்களில் இவ்வாறான நிலை மீள் குடியேற்றத்துக்குப் பின்னர் தொடர்கின்றது என்றும் மக்கள் கவலை தெரிவித்தனர். இது பற்றிப் பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-ரி3)

# மரக்கடத்தல் நடவடிக்கை முறியடிப்பு

முல்லைத்தீவு,ஜுலை 25

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐயன்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மரக்கடத்தல் நடவடிக்கை நேற்றுமுன்தினம் அதிகாலை முறியடிக்கப்பட்டுள்ளது. ஒலுமடு வனபரிபாலன அலுவலகர் பிரிவுக்கு உட்பட்ட ஐயன்குளம் பகுதியில் முதிரை மரம் கடத்தப்படுவதாக வனபரிபாலசபையினருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது. சம்பவத்தை அடுத்து அங்கு சென்றபோது மரக் கடத்தலில் ஈடுபட்டவர்கள் முதிரைமரக் குற்றிகள் ஏற்றப்பட்ட நிலையில் காணப்பட்ட வாகனத்தை கைவிட்டுவிட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.



கைப்பற்றப்பட்ட வாகனமும் மரக்குற்றிகளும் நீதிமன்றில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வன பரிபாலன திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ஐ-222)

# அரச தலைவரின் கருத்து ஏமாற்றத்தைத் தருகிறது

## கத்தோலிக்கத் திருச்சபை தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

அரச தலைவரின் கருத்துக்களால் ஏமாற்றமடைந்துள்ளோம் என்று கத்தோலிக்க திருச்சபையின் செய்தித் தொடர்பாளர் வண. ஜூட் கிருஷாந்த தெரிவித்துள்ளார். அரசுக்கு எதிராக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்வைத்த கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் கடந்த திங்கட்கிழமை அரச தலைவர் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அது தொடர்பாக நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்த போதே திருச்சபையின் செய்தித் தொடர்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறிய கருத்துக்கள் குறித்து சமூகத்தின் சில பிரிவினர் முன்வைத்த குற்றச்சாட்டுகள் நியாயமானவை அல்ல . கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆற்றிய உரையில் சில தவறான கருத்துக்கள் இருக்கின்றன என்று அரச தலைவர் உணர்ந்திருந்தால், கர்தினாலுக்கு முன்பாக இந்த விடயத்தை தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த நாடாளுமன்ற தெரிவுக்குழு அமர்வுகளில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்னிலையாகவில்லை. அதற்கான அதிகாரப்பூர்வ அழைப்பு கிடைக்கவில்லை-என்றார்.

உயிர்த் ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலால் பாதிக்கப்பட்ட கட்டுவபிட்டிய செயின்ட் செபாஸ்டியன் தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட ஆராதனை நிகழ்வில், "அரசுக்கு முதுகெலும்பு இல்லை, அது சர்வதேச சமூகத்தால் ஆணையிடப்படுவது தேவையற்றது" என பன்னாட்டு கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தார்.

இந்த கருத்திற்கு பதிலளித்த அரச தலைவர் மைத்திரி, "உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக பல்வேறு அரசியல் நிகழ்ச்சி நிரல்களை மனதில் கொண்டு, யாரும் முடிவுக்கு வரக்கூடாது. தாக்குதல்களுக்குப் பின்னர் அரசு தனது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றியது'' என்று கூறியிருந்தார். (எ)

# தமிழ் செயலகப் பிரச்சினையை இருதரப்புப் பேச்சால் தீர்க்கலாம்

## *முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறுகிறார்*

கல்முனை, ஜூலை 25

கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பாக முஸ்லிம் தரப்பினரால் கொடுக்கப்பட்ட ஆதாரங்கள் விளக்கங்களைப் பெற்றுக்கொண்டு கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலக விடயச் சிக்கலுக்கு இருதரப்பினரின் நேரடிப் பேச்சின் அவசியத்தை வலியுறுத்தியுள்ள வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அடுத்த கட்ட நகர்வாக ஒரு குடையின் கீழ் யாவரும் ஒன்று பட்டு ஒரு இனத்தின் உரிமைகளை மதித்து நடப்பதுடன் விட்டுக் கொடுப்பின் ஊடாக மேற்குறித்த விடயத்துக்குத் தீர்வுகாண முடியும் என்று கூறினார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்துக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் பயணம் செய்துள்ளார்.

அதன்போது கல்முனை உப செயலக விடயம் தொடர்பாக முஸ்லிம் தரப்பினரின் கருத்துக்கள் அவை சார்ந்த நியாயங்கள் தொடர்பாக சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்கப் பேரவைத் தலைவரும் அரசியல் விமர்சகருமான எம்.எச்.எம் இப்றாஹீம் தலைமையிலான பேரவை உறுப்பினர்கள் விக்னேஸ்வரனுக்கு விளக்கமளித்தனர். கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பான விளக்கப்புத்தகம் ஒன்றினையும் வழங்கினர். அதனைச் செவிமடுத்த விக்னேஸ்வரன், முஸ்லிம் தரப்பினரின் கருத்தை ஏற்றுக் கொண்டார். இனிவரும் காலங்களில் இன ஐக்கிய விடயங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்தார்.

இதுதவிர, விக்னேஸ்வரன் குழுவினர், கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்துக்கும் சென்றிருந்தனர். அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்போது கணக்காளர் நியமனம் சம்மந்தமாக உத்தியோக பூர்வ கடிதம் வழங்கப்பட்டமையால் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்ட கணக்காளர் இன்னும் வருகை தராமை வேதனையளிப்பதாக விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

இதேவேளை, கல்முனை சிங்களமகாவித்தியாலயத்துக்கும் விக்னேஸ்வரன் குழுவினர் சென்று குறைநிறைகளைக் கேட்டறிந்தனர்.

கடந்த காலத்தில் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்துக்கு நீதி கோரி அண்மையில் உணவு ஒறுப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. கல்முனைப் பிரதேச மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் அரசிடமும் தொடர்ந்து தங்கள் கோரிக்கையை நிறைவேற்றுமாறு தொடர் அழுத்தத்தையும் பிரயோகித்து வருகின்றனர். (த)

## இழந்துபோன செல்வாக்கை மீளப்பெறவே

# மக்கள் பிரச்சினைகள் பற்றிச் சிலர் சிலுசிலுப்பு அரசியல் செய்கின்றனர்

## கூட்டமைப்பின் சிறிநேசன் எம்.பி. தெரிவிக்கிறார்

*மட்டக்களப்பு, ஜூலை25*

*தற்போதையை நிலமைகளில் பலர் தவிச்ச முயல் அடிப்பதற்கே முயற்சிக்கின்றார்கள். அவர்கள் இழந்துபோன செல்வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிலுசிலுப்பு அரசியலைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.*



ஆனால் அதற்கான விடயங்களைக் கையாள்வது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே இருக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

கிராம எழுச்சித் திட்ட நிதி ஒதுக்கீட்டில் வெல்லாவெளி பிரதேசத்தில் வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தும், முடிக்கப்பட்ட வேலைகளை மக்கள் பாவனைக்காக வழங்குவதுமான நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதையை நிலமைகளில் பலர் தவிச்சமுயல் அடிப்பதற்கே முயற்சிக்கின்றார்கள். அவர்கள் இழந்துபோன செல்வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிலுசிலுப்பு அரசியல் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதற்கான விடயங்களைக் கையாள்வது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே இருக்கின்றது. குற்றம் சுமத்துபவர்கள் அதனைச் சொல்லிவிட்டு இருந்துவிடுவார்கள், ஆனால் எதனையும் செய்வதில்லை. சொல்லிக் கொண்டிருப்பது மிக இலகுவான காரியம். ஆனால் அதனைச் செய்து முடிப்பதுதான் கடினமான விடயம். இங்கிருக்கின்ற பல அரசியல்வாதிகள் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். எதனையும் செய்ய மாட்டார்கள். அவர்கள் சொல்லுகின்ற விடயங்களை ஒவ்வொன்றாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே செய்து கொண்டிருக்கின்றது. கல்முனை தொடக்கம் கன்னியா உட்பட எமது உரிமைப் பிரச்சினைகள், அரசியற் கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் என அனைத்திலும் எமது தலைமைகளே முற்றுமுழுதாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

### உண்மையை கண்டறியுங்கள்

எமது பிரதேசங்களில் பல பொய்கள் உலாவித் திரிகின்றன. பொய்களை எடுத்த எடுப்பில் நம்பும் சிலர் உண்மையான விடயங்களை அறிவதற்கு முற்படவேண்டும். நாங்கள் சிலசில தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம். அவ்வாறு தொழில் பெற்றவர்கள் எவரும் ஒரு சதம் கூட செலவழிக்கவில்லை. ஆனால் பலர் இவ்வாறு தொழில்வாய்ப்புக்களை வழங்க லட்சக் கணக்கில் பணம் வாங்குகின்றார்கள், வாங்கியும் இருக்கின்றார்கள்.

### பணம் பெறவுமில்லை சுருட்டவுமில்லை

அதேபோன்று அபிவிருத்தி சார்ந்த விடயங்களிலும்கூட எவ்வித பணச் சுருட்டல்களும் இன்றி செயற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். பணம் சுருட்டுகின்ற அரசியல்வாதிகள், நிர்வாகிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

### நல்ல கட்சி

தனிப்பட்ட கோப குரோதங்களுக்காக நாங்கள் எவரையும் பழிவாங்குவதில்லை. மக்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கவும் மாட்டோம். நாங்கள் மக்களுக்கு விரோதமாகச் செயற்படுகின்ற அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்போனால் இன்னுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் எதிரிக்கெதிரி நண்பன் என்ற ரீதியில் அவருக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார். ஏன் அவ்வாறான அதிகாரி ஒருவரை அவர் அரச அதிபராக அலங்கரிப்பதற்குக் கூட ஆசை கொண்டுள்ளார். இவ்வாறு நிலமைகள் சென்று கொண்டிருக்கின்றன.

என்னுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் அடிப்படையில் ஒரு அதிகாரியின் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக பொய்ப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உண்மையில் அவ்வாறு இல்லை. அவர் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர் சக அலுவலர்களுடன், மக்களுடன் அணுகும் முறைமை மற்றும் அவரின் லஞ்ச ஊழல் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் விசாரணைக் குழுவால் கண்டறியப்பட்டே அவரின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் பொய்யான விடயங்களுக்கு இடமில்லை.

எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி எமது மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சரியான முறையில் ஒதுக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கின்றது. அந்த அடிப்படையில் நிதிப் பங்கீடுகளை மேற்கொண்டு வருகின்றோம். இருப்பினும் எமது பகுதிகளின் பரப்பு அதிகமாக இருப்பதால் நாங்கள் எவ்வளவு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொண்டாலும் பற்றாக்குறை நீடிக்கிறது.

எதிர்காலங்களில் இவை தொடர்பிலும் கவனம் எடுப்போம் - என்றார். (த)

# கூட்டமைப்பினரின் ஏமாற்றுத்தனங்களை தமிழ் மக்களே புரிந்துகொள்ளவேண்டும்

## வரதராஜப்பெருமாள் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தமிழ் மக்களைச் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றியது போலவே இன்றைக்கு தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர் எனக் குற்றஞ்சாட்டியிருக்கும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையளித்து வாக்குகளைப் பெற்று தமிழ் மக்களின் தலைவர்களாக இருக்கின்ற கூட்டமைப்பினரின் ஏமாற்றுத்தனங்களை தமிழ் மக்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவில் தான் இந்த அரசு கொண்டுவரப்பட்டது மாத்திரமல்லாமல் இன்றைக்குக் கூட்டமைப்பின் ஆதரவில் தான் இந்த அரசு தப்பிப் பிழைத்து நிற்கிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் நலன்சார்ந்து கூட்டமைப்பினர் முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இந்த அரசு கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகளாகியும் தமிழ் மக்களின் நலன்சார்ந்து செயற்படுவதற்குக் கூட்டமைப்பினர் தவறி வருகின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரையில் அடுத்த தேர்தல்களை இலக்கு வைத்து தமது பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றனர்.

கடந்த நான்கு வருடத்தில் அரசியல் கைதிகள் விடுதலை, பௌத்த மயமாக்கல் போன்ற பலவற்றைச் செய்திருக்கலாம். இந்த விடயங்கள் தொடர்பில் அரசியல் தீர்மானங்களை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதில் அக்கறை செலுத்தவில்லை. இவ்வாறான நிலையில் தான் இன்றைக்கு பௌத்த மேலாதிக்கச் சிந்தனையால் நிலைமை மோசமாகியிருக்கின்றது.

இந்த விடயங்களில் ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது கூட்டமைப்போ நேரடியாக எந்தவித அக்கறையையும் செலுத்தவில்லை. ஒரு சட்டத்தரணி என்ற வகையில் கன்னியா விவகாரத்தில் சுமந்திரன் செயற்பட்டிருக்கின்றதைப் பாராட்டுகின்ற அதே வேளையில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் சுமந்திரன் உட்பட கூட்டமைப்பினர் அனைவரும் என்ன செய்தனர் அல்லது செய்த கொண்டிருக்கின்றனர்? என்ற கேள்வி எழுகின்றது.

கன்னியர் விவகாரம் கூட நீதிமன்ற விவகாரம் அல்ல. அது உண்மையில் அரசியல் விவகாரம் தான். ஆகவே அரசியல் ரீதியான முடிவுகளை எடு[illegible] வேண்டியது அவசியமானது. [illegible] போலவே அரசியல் தீர்வு விடயத்தி[illegible] 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பல[illegible]வைகள் தீர்வு வருகிறது என்று கூ[illegible] போதும் தீர்வு இன்னமும் வரவில்லை. யாழ்ப்பாணம் வந்த [illegible] சர் இன்னும் மூன்று வருடங்கள[illegible] தீர்வு என்று கூறியிருக்கின்றார்.

அவர்களைப் பொறுத்தவரையில் இரு[illegible]கின்ற தமது பதவிகளை பாதுகாப்ப[illegible]டன் எதிர்காலத்தில் தமது பதவிகளைப் பெற்றுக் கொள்வதிலும் தமது பைகளை நிரப்புவதற்குமான அரசியலையே தற்போது நடத்தி வருகின்றனர். - என்றார். (கூ-ரி)

### இலத்திரனியல் வாக்கெடுப்பில்

# 'சைபர்' பாதுகாப்புக்களை மேற்கொள்ள தேர்தல் ஆணைக்குழு லண்டன் பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

இலங்கையில் இடம்பெறும் தேர்தல்களில் இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையை ஏற்படுத்தினால் எவ்வகையான 'சைபர்' பாதுகாப்புக்களை மேற்கொள்வது என்பது தொடர்பில் பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பணிமனையில் இடம்பெறும் கருத்தமர்வுக்கு இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் லண்டன் பயணமாகின்றனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான இரட்ணஜீவன் எச் ஹூல் தலைமையிலான குழுவினரே கருத்தமர்வுக்கு எதிர்வரும் 27ஆம் திகதி பயணிக்கின்றனர்.

எதிர்வரும் 30ஆம் 31ஆம் திகதிகளில் இரண்டு நாள்கள் கருத்தமர்வாக இது இடம்பெறவுள்ளது. இந்தக் கருத்தமர்வில் இலத்திரனியல் வாக்களிப்பில் மோசடிகள் இடம்பெறாது மேற்கொள்ளும் பாதுகாப்பு முறைமைகள், சைபர் பாதுகாப்பு இலத்திரனியல் வாக்களிப்பில் ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தவிர்க்கும் வழி முறைகள் தொடர்பில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

அண்மையில் இலங்கைக்குப் பயணித்த பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் இதற்கான அழைப்பை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் விடுத்திருந்தனர். (த-105)

## ஐ.தே.கவின் வேட்பாளர் குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை

*இப்படிக் கூறுகின்றார் ரவி*

கொழும்பு, ஜூலை 25

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை. இது தொடர்பில் கட்சியின் உயர்பீடமே இறுதி முடிவெடுக்கும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் அமைச்சருமான ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

பல வருட அரசியல் அனுபவம்கொண்டவரே அரச தலைவர் வேட்பாளராகத் தெரிவாக வேண்டும். தகுதியில்லாதவர்கள் அரசதலைவர் வேட்பாளராகும் கனவு காணக்கூடாது.

எல்லோருக்கும் பதவி ஆசை இருக்கத்தான் செய்யும். ஆனால், தகுதியானவர்களுக்கே அந்தப் பதவி போய்ச் சேர வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை. சிலரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆனால், இது தொடர்பில் கட்சியின் உயர்பீடமே இறுதி முடிவெடுக்கும். தனிநபர்கள் வேட்பாளர்களைத் தீர்மானிப்பதில்லை - என்றார். (எ-22)

## ஐ.தே.க. வேட்பாளரின் பெயர் அடுத்த மாதம் வெளியாகும்!

*பிரதி அமைச்சர் நளின் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 25

ஐக்கியதேசியகட்சியின்அரச தலைவர் வேட்பாளர் யார் என்பதை அடுத்த மாதம் அறிவிப்போம் . அடுத்த மாதத்தில் இருந்து அரச தலைவர் வேட்பாளருடன் ஐக்கிய தேசிய கட்சியின் பரப்புரை நடவடிக்கைகள் ஆரம்பிக்கும். மக்கள் எதிர்பார்க்கும் நபர் ஒருவரையே அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்குவோம்.

இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த பிரதி அமைச்சர் நளின் பண்டார நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கொண்டுவரப்பட்ட நிர்வாக மாவட்ட சட்டத்தில் திருத்தங்களை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசிய கட்சியின் பக்கமே சர்ச்சைகளும் , பிரச்சினைகளும் இருக்கின்றன என்று சிலர் நினைக்கின்றனர்.

ஆனால் எமது பக்கத்தில் எந்த பிரச்சினையும் கிடையாது. நாங்கள் தமிழ் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்டக் கட்சிகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றோம். நாங்கள் இவர்களுடன் சரியாக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதாலேயே 52 நாள் சூழ்ச்சியின் போது எங்களால் வெற்றிப் பெற முடியுமாக இருந்தது.

மறு பக்கத்தில் எந்த பிரச்சினையும் கிடையாது. கடந்த 4 வருடங்களில் நாங்கள் எல்லா கட்சிகளுடனும் பயணித்தது போன்று எதிர்வரும் அரச தலைவர் தேர்தலிலும் பயணிப்போம் - என்றார். (எ)

## ரணில் சரியான நேரத்தில் வேட்பாளரை அறிவிப்பார்

*பந்துல லால் எம்.பி. தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 25

அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாகச் சரியான நேரத்தில் தீர்க்கமான முடிவைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எடுப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல லால் பண்டாரிகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த விடயம் தொடர்பாக கட்சியின் செயற்குழு மற்றும் நாடாளுமன்றக் குழுவுடன் கலந்துரையாடிய பின்னர் கட்சித் தலைவர் என்ற ரீதியில் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க சரியான முடிவை அறிவிப்பார்.

வேட்பாளர் யார் என்பதில் உறுப்பினர்கள் தங்கள் சொந்த கருத்துக்களைக்கொண்டிருந்தாலும்பலர்கூறுவதைப்போல கட்சிக்குள் எந்த மோதலும் இல்லை. (எ)

## தேர்தல்களில் ஐ.தே.க. தோற்பது முடிவானது

*மகிந்த அணி ஆரூடம்!*

கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியடைவது உறுதி. இந்தநிலையில் வேட்பாளர் தெரிவு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் வாக்குவாதங்களில் ஈடுபடுவதைப் பார்க்கும்போது வெட்கமாக இருக்கின்றது.

இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்சதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சியினர் வீட்டுக்குப் போகும் வழியைத்தான் பார்க்க வேண்டும். இந்த நாட்டை அவர்கள் நாசமாக்கியது போதும். நாட்டு மக்கள் அனைவரையும் ரணில் அரசு ஏழைகளாக்கிவிட்டது. இந்த அரசை இனிமேலும் மக்கள் நம்ப மாட்டார்கள்.

விரைவில் மீண்டும் ராஜபக்ச ஆட்சி மலரும். நாட்டு மக்களுக்கு நற்செய்திகள் காத்திருக்கின்றன"-என்றார். (எ-22)

## மைத்திரி - மகிந்த சந்தித்து பேச்சு நடத்துவது முக்கியம்

*வலியுறுத்துகின்றது சுதந்திரக் கட்சி*

கொழும்பு, ஜூலை 25

பரந்துபட்ட கூட்டணியை அமைக்காது வேட்பாளரை தெரிவு செய்வதென்பது சாத்தியமற்ற விடயமாகும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட தலைவர்கள் விரைவில் கலந்துரையாடி தீர்மானத்துக்கு வர வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் பொதுச் செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த விடயத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் நகர்வுகள் முக்கியமானவையாகும். நிலையான கொள்கையுடைய அரசை நோக்கி நகர வேண்டும். தனி நபர்கள் மற்றும் அரசியல் கட்சிகளால் நாட்டின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. எனவே நாட்டுக்கு நிலையான கொள்கை ஒன்று அத்தியவசியமாகின்றது. மாறாத கொள்கையை நோக்கிய அரசியல் பயணத்தை நாட்டில் ஏற்படுத்தும் நோக்குடன் சிறிலங்கா சுதந்திர கட்சி செயற்படும்.

இல்லையென்றால் இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் நாடு பாதாளத்திலேயே இருக்கும். கட்சி பேதங்களை மறந்து நபர்களுக்கு முக்கியத்தும் கொடுக்காது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்பதே சுதந்திர கட்சியின் நிலைப்பாடாகும். மத்திய செயற்குழுவிலும் நிலையான கொள்கை திட்டம் குறித்து பேசப்பட உள்ளது. அதற்கமைவாகவே எதிர்கால செயற்பாடுகள் காணப்படும். அதே போன்று எதிர்கால தேர்தல்களை மையப்படுத்தி கூட்டணிகள் அமைக்கப்படும் பட்சத்தில் இந்த கொள்கை திட்டத்துடன் இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்வோம்.

வலுவான கூட்டணியொன்றை அமைக்காது அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாகப் பேசுவதில் பலனில்லை. 1994ஆம் ஆண்டு பொடி ஹப்புவாமியின் கட்சியுடன் தான் முதற் தடவையாக சுதந்திர கட்சி கூட்டணி அமைத்தது. அன்று முதல் இன்று வரை சுதந்திர கட்சி பல கட்சிகளை இணைத்து கூட்டணியாகவே தேர்தல்களில் போட்டியிடுகின்றது. கூட்டணி அமைக்க முன்னர் வேட்பாளர் எந்வொரு சந்தர்ப்பத்திலும் தெரிவு செய்யப்படவில்லை.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட தினேஷ் குனவர்தன போன்ற கட்சி தலைவர்களுடன் ஒன்றிணைந்து கலந்துரையாடி எவ்வாறு வலுவான கூட்டணியை உருவாக்குவது என்பதைதீர்மானிக்கவேண்டும். அதன்பின்னரேவேட்பாளரை தெரிவு செய்ய வேண்டும். இதற்கு அப்பால் சென்று செயற்பட முடியாது. எனவே தலைவரை அறிவிக்க அவசரப்படதேவையில்லை. ஒற்றுமையுடன் முதலில் கூட்டணியை உருவாக்குவோம். ஐக்கிய தேசிய கட்சி இன்னும் வேட்பாளரை அறிவிக்கவில்லை. மாறாக எதிர்வரும்5ஆம்திகதிகூட்டணியை அமைக்கப் போவதாக அறிவித்துள்ளது. இவ்வாறே செயற்பட வேண்டும். அரச தலைவர் சம்மந்தப்பட்ட தரப்புகளுடன் விரைவில் பேச்சை முன்னெடுப்பார் என நம்புகின்றேன்- என்றார். (எ)

# பலமான நிர்வாகத்துக்காக புதிய கூட்டணி உருவாகும்

*தலைமை அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு நாட்டைப் பலமான நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கிலேயே புதிய கூட்டணி அமைக்கப்படவுள்ளது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவிசாவளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

புதிய கூட்டணியை அரசியல் கட்சியாக பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்கள் நாம் மக்களின் விமர்சனங்களுக்கு உள்ளாகி வந்தோம். அதையடுத்துப் பல்வேறு இயற்கை அனர்த்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. பின்னர் அரசியல் ரீதியான பல்வேறு சவால்களையும் நாம் கடந்த வருடம் சந்தித்தோம். இவை அனைத்தையும் நாம் கடந்து வந்துகொண்டிருக்கும்போதுதான் குண்டுத் தாக்குதல்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியேற்பட்டது. இவ்வாறு பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே நாம் எமது அரசியல் பயணத்தை மேற்கொண்டிருந்தோம்.

நாம் அரசியலுக்கு வந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என இரண்டு கட்சிகள் மட்டுமே இருந்தன. இன்று, அப்படியல்ல. பல்வேறு கட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டுதான் நாம் அரசியல் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தற்போது நாம் அடுத்தக்கட்டத்தை நோக்கி நகர வேண்டும். எதிர்காலம் குறித்து சிந்தித்தே அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதற்காகவே நாம்புதியக்கூட்டணியொன்றை அமைக்க முடிவு செய்துள்ளோம். இதனை நாம்அரசியல்கட்சியாகபதிவுசெய்யவுள்ளோம். ஒகஸ்ட் 5ஆம் திகதி இதுதொடர்பாக நாம் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். இந்தக் கூட்டணி அடுத்த 5 வருடங்களுக்கு நாட்டை பலமான பாதைக்கு இட்டுச்செல்லும் என்பதை நான் உறுதியுடன் கூறிக்கொள்கிறேன் - என்றார். (எ)

## சந்தேத்தின் பேரில் 6 பேர் கைது

புத்தளம், வணாத்துவில்லு பகுதியில் சந்தேகத்துக்கிடமான வகையில் நடமாடிய 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வணாத்துவில் லெக்டோ தோட்டத்துக்கு அருகிலேயே நேற்று அதிகாலை அவர்கள் 6 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று வணாத்துவில்லு பொலிஸார் குறிப்பிட்டனர்.


கடந்த 16 ஆம் திகதியும் இப்பகுதியில் வெடிமருந்துகளுடன் 3 சந்தேக நபர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நேற்றுக் கைது செய்யப்பட்டவர்கள் அடிப்படைவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களா என்பது குறித்துவிசாரணைகள்மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# கழிவுப் பொருள்கள் இறக்குமதி துரித விசாரணைக்கு உத்தரவு!

கொழும்பு, ஜூலை 25

பிரிட்டனிலிருந்து கொள்கலன்களில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட கழிவுப்பொருள்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிதியமைச்சர் மங்கள சமரவீர இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.



அதேவேளை, வெளிநாட்டிலிருந்து கொள்கலன்களில் அடைத்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள பெருமளவு கழிவுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், அதன் முடிவில் அந்தக் கழிவுகளை மீண்டும் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றுகொழும்பிலுள்ள சுங்கத்திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பில் சுங்கப்பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்திருந்தார்.

பன்னாட்டு வர்த்தகம் தொடர்பில் வழங்கப்படும் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி உபயோகப்படுத்தப்பட்ட மெத்தைகள் மற்றும் வேறு கழிவுகள் அடங்கிய 241 கொள்கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 130 கொள்கலன்கள் இந்த இறக்குமதியுடன் தொடர்புடைய தரப்பால் பொறுப்பேற்கப்பட்டு விட்டன. எஞ்சிய 111 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

சுங்கப்பிரிவால் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், அது தொடர்பான முழு விவரங்களையும் தற்போது வெளியிட முடியாத சூழ்நிலை உள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இறக்கு மதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களும் சுங்கப்பிரிவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை. இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு, சுதந்திர வர்த்தக வாய்ப்புக்களைப் பெற்றிருக்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றால் 130 கொள்கலன்கள் பொறுப்பேற்கப்பட்டு விட்டன. இதனுடன் மேலும் இரு பிரபல தனியார் நிறுவனங்கள் தொடர்புபட்டுள்ளன.

தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ள கழிவுகள் குறித்து மத்திய சுற்றாடல் அதிகார சபையால் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டனவா என்பது எமக்குத் தெரியாது. எனினும் நாம் இந்த விடயம் தொடர்பில் கடந்த மே மாதம் 7 ஆம் திகதி விசாரணைகளை ஆரம்பித்தோம்.

உலகளவில் மருத்துவக் கழிவுகள், இலத்திரனியல் கழிவுகள், அணுக் கழிவுகள் உள்ளிட்ட பெருமளவான கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. இவை பல மில்லியன் டொலர்களுக்கு, விற்பனை செய்யப்படுகின்றன. இதன் பின்னணியில் உள்ள ஆபத்து இன்னமும் புரிந்து கொள்ளப்படவில்லை. ஆனால் அனைத்து அரசுகளிடமும் நாங்கள் இதுபற்றி எடுத்துக்கூறி வந்திருக்கிறோம்.

இதுகுறித்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம். அதன் முடிவில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கழிவுகளை மீள் ஏற்றுமதி செய்வதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதற்குத் தீர்மானித்திருக்கிறோம் என்றும் சுங்கப்பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன மேலும் தெரிவித்திருந்தார்.

தற்போது நிதியமைச்சர் மங்கள சமரவீர குறித்த குப்பைகள் அடங்கிய கொள்கலன்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு உத்தரவு விடுத்துள்ளார். (எ)

## கழிவுப் பொருள் இறக்குமதிக்கும் கடந்த அரசுக்கும் தொடர்பில்லை

*பந்துல குணவர்த்தன எம்.பி. தெரிவிப்பு*



கொழும்பு, ஜூலை 25

இரகசியமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள பெருமளவிலான கழிவுப் பொருள்கள் அடங்கிய கொள் கலன்களுக்கும் கடந்த அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. 2013.07.11ஆம் திகதி வெளியிடப்பட்ட 1818.30 இலக்க அரசிதழில் குப்பை இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி தொடர்பில் எவ்விடத்திலும் குறிப்பிடப்பட வில்லை.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரி வித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

சிங்கப்பூர் நாட்டுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் ஊடாகவே வெளிநாட்டில் இருந்து பெருமளவிலான கழிக்கப்பட்ட பொருள்கள் இரகசியமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்பதை எம்மால் தகுந்த ஆதாரத்துடன் தெளி வுப்படுத்த முடியும்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசு இரகசியமான முறையில் செய்துக் கொண்ட செயற்பாடுகள் பகிரங்கப்படுத்தப்படும் போது அதன் ஆரம்பம் கடந்த அரசாலேயே ஏற்பட்டது என்பது குறிப்பிட்டுத் தம்மை நியாயப்படுத்திக் கொள்வது பழக்கமாகி விட்டதொரு விடயமாகும்.

இறக்குமதி செய்யப்பட்டுள்ள கழிவுப் பொருள்களுக்கான அனுமதி தொடர்பான வர்த்தமானி கடந்த அரசிலேயே வெளியிடப்பட்டது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் குறிப்பிட்டுள்ளமை தவறானதாகும்.

கடந்த அரசில் 2013.07.11 ஆம் திகதி 1818.30 இலக்கத்தில் வெளியிட்ட வர்த்தமா னியில் எவ்விடத்திலும் பிற நாட்டுக் கழிக்கப்பட்ட பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டு அவை மீண்டும் மீள் ஏற்றுமதி செய்யப்படும் என்று குறிப்பிடப்பட வில்லை.

இந்த விடயம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன சுயாதீனமான விசா ரணைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார் அவர். (எ)

## கழிவுப் பொருள் இறக்குமதி: பிரிட்டன் அரசும் விசாரணை

கொழும்பு, ஜூலை 25

பிரிட்டனில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள கழிவுப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்கள் தொடர்பில் அந்த நாட்டின் சுற்றாடல், உணவு மற்றும் கிராமிய விவகாரத் திணைக்களத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பிரிட்டனில் இருந்து வெளியாகும் 'டெலிகிராப்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மீள் சுழற்சிக்காக பிரிட்டனிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட கொள்கலன்களுக்குள் இருந்து மனித உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று அந்தப் பத்திரிகை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கொள்கலன்களை மீண்டும் பிரிட்டனுக்கு அனுப்புவதாக இலங்கை அதிகாரிகள் அறிவித்ததை அடுத்து, இது தொடர்பில் பிரிட்டன் அரசு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

2 வருடங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட 111 கொள்கலன்கள் வைக்கப்பட்டிருந்த கொழும்புத் துறைமுகத்திலுள்ள பிரிவொன்றிலிருந்து அதிகளவு துர்நாற்றம் வந்தமை தொடர்பில் ஆராய்ந்து பார்த்தபோதே இந்தத் தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று 'டெலிகிராப்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அந்தக் கொள்கலன்களில் மெத்தைகளுடன் சத்திர சிகிச்சைக் கழிவுகள், பிளாஸ்டிக் கழிவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயன்படுத்தப்பட்ட மெத்தைகள் என்றபோர்வையில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட கழிவுகள் அபாயகரமானவை என மத்திய சுற்றாடல் அதிகார சபையை மேற்கோள்காட்டி 'டெலிகிராப்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டனின் மனித உடற்பாகங்கள் இந்தக் கொள்கலன்களில் காணப்படுகின்றமை உறுதி செய்யப்பட்டால், மருத்துவமனைக் கழிவுகளை அகற்றுவது தொடர்பில் சர்ச்சையை எதிர்கொண்டுள்ள என்எச்எஸ் மருத்துவமனைகளின் கழிவுப்பொருள்கள் என நம்ப முடியும் எனவும் இந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## கழிவுப் பொருள் இறக்குமதியா அரசு கூறுகின்ற முதலீடு?

*தயாசிறி எம்.பி. கேள்வி*

கொழும்பு, ஜூலை 25

40 அடி நீளமான 130 கொள்கலன்களில் 12 தடவைகளில் 2.488 மெட்ரிக் தொன் கழிவுப் பொருள்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. இவ்வாறு நாட்டிற்குக் கொண்டு வரப்படுகின்ற கழிவுப்பொருள்களா அரசாங்கத்தின் முதலீடா?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்டுநாயக்கவில் குவிக்கப்பட்டுள்ள வெளிநாடுகளின் கழிவுகள் தொடர்பாகப் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. 11.07.2013 இது தொடர்பான அரசிதழ் அறிவிப்பு விடுக்க ப்பட்டுள்ளது. அதன்மூலம் நாட்டுக்குள் எந்தவொரு பொருளையும் தடையின்றிக் கொண்டுவர முடியும். 5 மில்லியன் டொலர் முதலீடு காணப்படும் பட்சத்தில் எந்தக் கழிவையும் நாட்டுக்குள் கொண்டுவர முடியும். அவ்வாறுதான் அந்த அரசிதழ் அறிவிப்பு காணப்படுகின்றது.

ஒரு கட்டத்தில் 5 மில்லியன் டொலராகக் காணப் பட்ட தொகை 2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைக்கப்பட்டது. ஏற்றுமதி இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் சுங்கச் சட்டம் என அனைத்துக்கும் அப்பால் சென்று நாட்டுக்குள் 2 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடுகளுடன் பொருள்களையோ, கழிவுகளையோ கொண்டுவரக் கூடியதாக உள்ளது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து 2018 ஜனவரி மாதம் வரை இவ்வாறான கழிவுகளை நாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர் - என்றார். (எ)

## பிரி. தலைமை அமைச்சரை வாழ்த்தினார் மைத்திரிபால

கொன்சர்வேற்றிவ் கட்சியின் தலைமைப் போட்டியில் வெற்றிபெற்ற பொரிஸ் ஜோன்சன் பிரிட்டனின் புதிய தலைமை அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் நேற்றுப் பதிவிட்டுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, "தலைமை அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொரிஸ் ஜோன்சனுக்கு வாழ்த்துக்கள். எங்கள் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உங்களுடன் பணியாற்ற நான் ஆர்வமாக இருக்கின்றேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கொன்சர்வேற்றிவ் கட்சியின் தலைமைப் போட்டியில் பொரிஸ் ஜோன்சன் மற்றும் ஜெரமி ஹன்ட் இருவரும் போட்டியிட்டனர். கொன்சர்வேற்றிவ் கட்சி உறுப்பினர்களின் வாக்குப்பதிவில் பொரிஸ் ஜோன்சன் 92 ஆயிரத்து 153 வாக்குகளைப் பெற்று புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (எ)

## துப்பாக்கிகள் மாயம்: விசாரணைகள் சி.ஐ.டியிடம்

கொழும்பு, ஜூலை 25

பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையத்திலிருந்து ரி56 ரக துப்பாக்கிகள் இரண்டு காணாமல் போனமை தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிகள் காணாமல் போனமையை அடுத்துப் பாணந்துறை வடக்கு பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரியின் சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தின் கடமை நேர பொறுப்பதிகாரியால், துப்பாக்கிகள் தொடர்பாக முன்னெடுத்த பரிசோதனைகளின்போது, ரி56 ரக துப்பாக்கிகள் இரண்டு காணாமல்போயுள்ளமை தெரியவந்திருந்தது. (எ)

# மகிந்த மனதார விரும்பினால் வேட்பாளராக களமிறங்குவேன்

## சமல் ராஜபக்ச அதிரடிக் கருத்து



கொழும்பு, ஜூலை 25

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மனதார விரும்பினால் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவேன்.

இவ்வாறு முன்னாள் சபாநாயகரும் மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் அரசதலைவர் வேட்பாளராக சமல் ராஜபக்ச இருக்க வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. அதேவேளை தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப் பட வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டிலும் மாற்றம் இல்லை என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருந்தார். இது தொடர்பாக சமல் மேலும் தெரிவித்ததாவது:

முப்பது வருடப் பயங்கரவாதப் போராட்டத்திலிருந்து இந்த நாட்டை மீட்டெடுத்ததிலும், நாட்டை மீளக் கட்டியெழுப்பியதிலும் ராஜபக்ச குடும்பத்துக்கு முக்கிய பங்குண்டு. ராஜபக்ச குடும்பத்தில் உள்ள அனைவரும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு முழுத் தகுதியுடையவர்கள்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மனதார விரும்பினால் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவேன் - என்றார். (ஏ-22)

# தேர்தல்களை எதிர்கொள்ள தயார் நிலையில் பெரமுன!

## ரம்புக்வெல தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 25

அரசுக்கு எமது பலத்தைக் காட்டுவதற்காக எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி (பெரமுன) சவால் விடுத்துள்ளது.

தேர்தல் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். தற்போதைய நிர்வாகம் தொழில்நுட்பக் காரணங்களைக் காட்டித் தேர்தலை நடத்தாமல் தாமதப்படுத்தி வருகின்றது. எந்தவொரு தேர்தல் முறையின் கீழும் தேர்தல்களை எதிர்கொள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தயாராக உள்ளது. தாமப்படுத்தப்பட்டுள்ள அனைத்துத் தேர்தல்களையும் அரசு உடனடியாக நடத்த வேண்டும் - என்றார். (ஏ)

# வெலிக்கடை தியாகிகள் நினைவுதினம்

திருகோணமலை.ஜூலை25

வெலிக்கடை தியாகிகள் நினைவுதினம் இன்று வியாழக்கிழமை திருகோணமலை வெலிக்கடை தியாகிகள் நினைவரங்கில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25,27 ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர்களான தலைவர் தங்கத்துரை, குட்டிமணி, முன்னணி போராளிகள் உட்பட 53 வீரமறவர்களின் நினைவாக அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

நிகழ்வில் ரெலோவின் தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எம்.கே. சிவாஜிலிங்கம் உட்பட ரெலோவின் முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

இதேவேளை இறுதிநாள் நினைவேந்தல் எதிர்வரும் 27 ஆம் திகதி ரெலோவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது. (ஐ-40)

# அர்ஜுனுக்குப் பிடியாணை: அடுத்த மாதமே தீர்மானம்

கொழும்பு, ஜூலை 25

மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல் மோசடி தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் மத்திய வாங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு பிடியாணை பிறப்பிப்பது தொடர்பான தீர்மானம் அடுத்த மாதம் அறிவிக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி பிடியாணை பிறப்பிப்பது குறித்த தீர்மானம் அறிவிக்கப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு தனது மருமகனுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்றுக்கு சட்டவிரோதமான முறையில் திறைசேரிப் பத்திரங்களை வழங்கினார் என்று அர்ஜுன் மகேந்திரன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதனால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பத்திர ஏலங்களின்போது குறைவான வட்டி விகிதத்தில் பெற விருப்பம் தெரிவித்த முதலீட்டாளர்களைத் தவிர்த்து வழங்கப்பட்டதன், விளைவாக, ஒட்டுமொத்தமாக அரசுக்கு சுமார் 1.6 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நட்டம் ஏற்பட்டுள்ளது என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதையடுத்து அன்றையதினத்தில் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அர்ஜுன் மகேந்திரன் குறித்த கோப் குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முதல்நாள் அதாவது 2016ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி நாட்டைவிட்டு அவர் வெளியேறினார்.

சிங்கப்பூரில் தஞ்சமடைந்துள்ள அர்ஜுன மகேந்திரனை ஒப்படைப்பது தொடர்பாக சிங்கப்பூர் தலைமை அமைச்சரிடம் தனிப்பட்ட முறையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் இரண்டாவது முறையாகக் கலந்துரையாடி இருந்தார்.(ஏ)

# கன்னியா சிவன் கோவிலில் ஆடி அமாவாசை உற்சவம்

திருகோணமலை.ஜூலை25

திருகோணமலை, கன்னியா வெந்நீரூற்று சிவன் கோவிலில் ஆடி அமாவாசை உற்சவமும், பிதுர் தர்ப்பணமும் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

சிவபக்தன் இராவணன் தனது தாயாருக்கு கன்னியா வெந்நீரூற்றில் பிதுர்க் கடமை செய்தார். இவ்வாறான வரலாற்றுச் சிறப்புமிக்க கன்னியா வெந்நீரூற்றில் இவ்வருடமும் ஆடி அமாவாசை பூசை வழிபாடுகள் நடைபெற்று பிதுர் தர்ப்பணம் நடைபெறும்.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு சிவபெருமானுக்கு அபிஷேகம் நடைபெற்று வெந்நீரூற்றில் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்ற பின்னர் சைவ அடியார்கள் கன்னியாவில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஏழு தீர்த்தங்களில் நீராடி பிதுர்தர்ப்பணம் செய்து சிவனை வழிபட்டு இறையருளைப் பெறுமாறு கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ-40)

# பதவியிலிருந்து விலகுமாறு கூறுவதற்கு அங்கஜன் யார்?

## எம்.பி. பதவியின் பெறுமதி தெரியாததால்தான் பொறுப்பற்றுக் கூறுகிறார் என்கிறார் சுகிர்தன்

வடமராட்சி, ஜூலை 25

கன்னியா விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் இன்னும் பதவி துறக்கவில்லை என்று நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் கேட்டிருந்தார். அவ்வாறு கேட்பதற்கு அங்கயன் யார்? இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் அல்வாய் பொலிகண்டி வட்டாரங்களில் அபிவிருத்தி வேலைத் திட்ட ஆரம்ப நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சி திக்கம் மத்திய சனசமூக நிலையத் தலைவர் சி.ஜெயபாரத் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கன்னியா சிங்கள மயமாக்கல் எதிர்ப்பு நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைக்குக் குரல் கொடுக்காத இவர்கள் தமது நாடாளுமன்றப் பதவிகளைத் துறக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் கேட்டிருந்தார். இப்படிக்கேட்க அவருக்கு என்ன தகுதி இருக்கிறது? நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவியின் பெறுமதி அவருக்குத் தெரியாததால் அவர் பொறுப்பற்றவிதத்தில் பேசுகின்றார்.

வடக்கு மாகாண ஆளுநர் அரசியல் வாதிபோல் செயற்படுகிறார். அடுத்தமுறை முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடப்போகிறார் போல் தெரிகிறது. அரச அலுவலர் மத்தியில் மைத்திரியின் அரசியலை சிங்களத்தில் பேசுகின்ற ஒரு நிறை வேற்று அதிகாரி தனது போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

எமது நிர்வாகத்தின் கீழ் உள்ள பிரதேச சபைகள் சிறப்பான பணிகளைச்செய்து வருகின்றன. இந்தப் பிரதேசத்துக்குரிய பருத்தித்துறை பிரதேச சபையும் சிறப்பான பணிகளை முன்னெடுத்து வருகின்றது. இன விடுதலைக்கான பணிகளைச் செய்ய வேண்டியது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமை. பிரதேச சபைகள் உள்ளூரில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவேண்டும்.

அந்த வகையில் பருத்தித்துறை பிரதேச சபையின் உபதலைவர் தினேஸ் வட்டார மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களின் தேவைகளை அறிந்து சேவைகளைச் செய்து வருகின்றார். அதன் பெறுபேறுகளாக ஒரே சமயத்தில் 6 அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன என்றார். பருத்தித்துறை பிரதேசசபைத் தவிசாளர் அ.ச.அரியகுமார் தனது உரையில்,

பருத்தித்துறைப் தொகுதியின் திக்கம், புலோலி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் தேசியத்துக்கு முக்கிய இடமுண்டு. கடந்த கால பொதுத் தேர்தல்களின் போது பருத்தித்துறைத் தொகுதியின் தமிழ் அரசுக்கட்சி வேட்பாளர் அமரர் துரைரத்தினம் வெற்றி பெற இக்கிராமங்களே பெரிதும் ஆதரவாக இருந்தன என்றார்.

உப தவிசாளர் .கு. தினேஸ் தனது உரையில், பருத்தித்துறைப்பிரதேச சபையின் திக்கம், பொலிகண்டி வட்டாரத்தில் 3 கிராம அலுவலர் பிரிவுகள் இருக்கின்றன. இங்கு மேற்கொள்ளப்படுவதும் அபிவிருத்திகளுக்கு 3 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் சம அளவிலேயே நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பிரதேச சபை கிராம எழுச்சி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடுகளிலிருந்தே இத்தகைய அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துகின்றன என்றார்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த வட்டாரத்தில் 6 அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். (த-173)

# கறுப்பு ஜூலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வு




மட்டக்களப்பு,ஜூலை 25

கறுப்பு ஜூலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு வெல்லாவெளியில் அமைந்துள்ள மட்டு. அம்பாறை மாவட்டக் காரியாலயத்தில் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலைக் கலவரத்தில் உயிரிழந்தவர்களுக்கு சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தி, நினைவுரைகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மா.நடராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-46)



இந்தியாவின் வட மாநிலங்கள், பீகார் , பங்களாதேஷ் ஆகிய இடங்களில் அண்மையில் கடும் மழை பெய்தது. இதனால் குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டனர். பங்களாதேஷின் ஜமல்பூரில் வெள்ளத்துக்குள் மூழ்கியுள்ள வீதியை மக்கள் கடக்கும் காட்சி இது.

# முகநூலுக்கு அபராதம் அமெ. கடும்நடவடிக்கை

வாஷிங்டன், ஜூலை 25

8.70கோடிபயன்பாட்டாளர்களின்தனிப்பட்டவிவரங்களை கேம்பிரிட்ஜ் அனாலிட்டிகா நிறுவனத்துக்கு வழங்கிய விவகாரத்தில் முகநூல் நிறுவனத்துக்கு 500 கோடி அமெரிக்க டொலர் அபராதம் விதித்தது அமெரிக்க வர்த்தக ஆணையகம். இந்த அபராதத்தை இந்த வார இறுதிக்குள் செலுத்தி விடுவதாக முகநூல் நிறுவனம் தெரிவித்தது. முகநூல் நிறுவனத்துக்கு அபராதம் விதிப்பது தொடர்பாக அமெரிக்க வர்த்தக ஆணையர்கள் மத்தியில் நடந்த வாக்கெடுப்பின் முடிவிலேயே இந்த அபராதம் விதிக்கப்பட்டது. .

**பின்னணி**

பிரிட்டனைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ் அனாலிட்டிகா எனும் தரவுகள்ஆய்வுசெய்யும்நிறுவனத்துடன்ஒப்பந்தம்செய்து சட்டவிரோதமாகப் பயன்பாட்டாளர்கள் 8.7 கோடி பேரின் தனிப்பட்ட விவரங்களை முகநூல் நிறுவனம் பகிர்ந்து கொண்டதாகத் தகவல்கள் கடந்த ஆண்டு வெளியாகின. இது முகநூல் பயன்படுத்துவோர் மத்தியில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக அமெரிக்காவின் வர்த்தக ஆணையகம் விசாரணை நடத்தியது. தொடர்ந்து அபராதம் விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது. உலகின் மிகப்பெரிய தொழில்நுட்ப நிறுவனமான முகநூலுக்கு விதிக்கப்பட்ட மிகப்பெரிய அபராதங்களில் இது ஒன்றாகும். ஆனால், முகநூல் நிறுவனத்துக்கு இந்த அபராதம் பெரிய தொகை இல்லை. 2018ஆம் ஆண்டில் முகநூல் நிறுவனத்தின் வருமானம் 5600 கோடி டொலர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிர்மலாதேவிக்கு மனநலசிகிச்சை

புதுடெல்லி, ஜூலை 25

பேராசிரியை நிர்மலாதேவி திருநெல்வலியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் மனநல சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் கல்லூரி மாணவிகளை தவறாகவழிநடத்தியகுற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்ட பேராசிரியை நிர்மலாதேவியின் நடவடிக்கைகளில் அண்மையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனாலேயே அவர் மனநலசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

விசாரணைக்காக ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றத்துக்குத் தாமதமாக முன்னிலையான பேராசிரியை நிர்மலாதேவி, அங்கிருந்து புறப்பட மறுத்துப் பல இடங்களில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டார். அன்று இரவு அருப்புக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே உள்ளதர்காவுக்குள்நுழைந்துதனக்குநபிகள்நாயகம் ஆசீர்வாதம்செய்துள்ளதாகக்கூறி அழுது புலம்பினார். பொலிஸாரால் அங்கிருந்து அழைத்துச்செல்லப்பட்டு ஆத்திப்பட்டியில் உள்ள அவரது வீட்டில் விடப்பட்டார். அதன்பின்தனதுகணவர்சரவணபாண்டியனின்வழக்கறிஞரான ஜோபுராஜ்குமாரை அலைபேசியில் தொடர்புகொண்டு தனது தற்போதைய நடவடிக்கைகள் குறித்தும், தனக்கு மனநல சிகிச்சை வேண்டும் என்றும் கூறினார். இதனால், அவரது உறவினர் உதவியுடன் திருநெல்வேலியில் உள்ள ஒரு தனியார் மனநல மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுக்கடந்தஒருவாரமாக அவர் உளவியல் சிகிச்சை பெற்று வருகிறார்.

# கொங்கோவில் தாக்குதல் 12 பேர் சாவு

கொங்கோவில்ஆயுததாரிகள்நடத்திய துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் குழந்தைகள் உட்படப் பொதுமக்கள் 12 பேர் சாவடைந்தனர். பலர் காயமடைந்தனர். கொங்கோவில் பெனிநகரத்துக்குஅருகிலேஇந்தத் தாக்குதல் நடந்தது. கொல்லப்பட்டவர்கள் தவிர பலர் காயமடைந்தனர். கொல்லப்பட்டவர்களில் பலர் குழந்தைகள். காயமடைந்தவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த ஆயுத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய ஆயுத இயக்கம் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்தனர். கொங்கோவின் வடக்கு மற்றும் தென் பகுதியில் கொங்கோ அரசுக்கு எதிராகப் பல்வேறு ஆயுத அமைப்புகள் செயற்பட்டு வருவதும், அவை பொதுமக்கள் மற்றும் அரச அலுவலர்களுக்குஎதிராகத்தாக்குதல்நடத்திவருவதும்குறிப்பிடத்தக்கது.



# இன்றைய நாள்

**மேடம்:** செயலில் திறமை மிகுந்திருக்கும். புதிய வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபார தொடர்பு பலம் பெறும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உறவினர்க்கு தேவையறிந்து உதவுவீர்கள்.

**இடபம்:** வசீகரத் தன்மையுடன் பேசுவீர்கள். எதிர்ப்பாளர் இடம் தெரியாமல் விலகுவர். தொழில் வியாபாரம் செழித்து வளர தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீரான அளவில் இருக்கும். சேமிப்புப் பணம் செலவுக்கு பயன்படும்.

**கடகம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். திட்டமிட்ட செயல் நிறைவேறும்முன் அவசரம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் சராசரி நிலை இருக்கும். பணவரவைவிட செலவு அதிகரிக்கும்.

**சிம்மம்:** தவறாக விமர்சித்தவர் கூட குறை உணர்ந்து நெருங்குவர். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். உபரி வருமானம் கிடைக்கும். பிள்ளைகளால் உதவி உண்டு.

**கன்னி:** பேச்சில் நகைச்சுவை உணர்வு வெளிப்படும். நண்பர்களிடம் நெருக்கம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் செழிக்க அதிக அளவில் பணிபுரிவீர்கள். கடனில் ஒரு பகுதி அடைபடும். உறவினர் மத்தியில் செல்வாக்கு கூடும்.

**துலாம்:** மனதில் நம்பிக்கை குறைவு ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி விற்பனை சீரான அளவில் இருக்கும். திடீர் செலவால் சேமிப்பு கரையும். பெண்கள் விலை உயர்ந்த பொருள் கவனமுடன் பயன்படுத்தவும் .

**விருச்சிகம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணியில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** சமயோசிதமாக நடந்து வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த நன்மை முழுஅளவில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**மகரம்:** சிறுபணிகளையும் நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் சீராக இருக்கும். அளவான பணவரவு கிடைக்கும். பெண்கள் ஆடம்பர செலவை தவிர்க்கவும்.

**கும்பம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** யாருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். கூடுதல் உழைப்பால் தொழில் வியாபார வளர்ச்சி சீராகும். மிதமான அளவில் பணவரவு கிடைக்கும். எதிர்பார்த்த செய்தி கிடைக்க தாமதமாகலாம்.

# வான் எல்லையில் அத்துமீறிய ரஷ்ய - சீன வானூர்திகள்

## துரத்தியது தென்கொரியா எதிர்க்கிறது ஜப்பான்

சியோல், ஜூலை 25
சீனாவினதும் ரஷ்யாவினதும் வானூர்திகள் தென்கொரியாவின் வான் பகுதியில்பறந்ததால்பெரும்பதற்றம்ஏற்பட்டது. இதையடுத்துத் தென்கொரியா தனது போர் வானூர்திகளை அனுப்பி ரஷ்யாவினதும், சீனாவினதும் வானூர்திகளை அப்பால் கலைத்தது.



இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:
சீனாவும்ரஷ்யாவும்இணைந்து கூட்டாக வானூர்திக் கண்காணிப்பில் ஈடுபட்டன. முதல் முறையாகச் சீனாவுடன் சேர்ந்து கூட்டாக வானூர்திக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவித்தது ரஷ்யா. ஜப்பான் கடல், கிழக்குச் சீனக் கடல் பகுதியில் திட்டமிட்ட பாதையில் போர் வானூர்திகளின் துணையோடு, குண்டுவீசும் நான்கு வானூர்திகளில் ரோந்துநடவடிக்கையில்ஈடுபட்டதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது. அந்தக் கண்காணிப்பு நடவடிக்கை தமது வான்பரப்பில் நடந்ததாகத் தெரிவிக்கின்ற தென்கொரியா ரஷ்ய - சீன வானூர்திகளைத் தனது வான் பரப்பிலிருந்து அப்புறப்படுத்துவதற்காகப் போர் வானூர்திகளைப் பயன்படுத்தியது. ரஷ்யவானூர்திகள் தமதுஎல்லைக்குள்பறந்ததால், போர் இயந்திரத் துப்பாக்கியாலும், சுடரொளித் துப்பாக்கியாலும் சுட்டு எச்சரித்ததாகத் தெரிவித்தது தென் கொரியா.
நிலமை இவ்வாறிருக்க, இந்தச் சம்பவம்தொடர்பாக ரஷ்யா மற்றும்தென் கொரியா ஆகிய இரண்டு நாடுகளுக்குமேஎதிர்ப்புத்தெரிவித்தது ஜப்பான். இந்த வான் அத்துமீறல், டோக்டோவ் டகேஷிமாதீவுகளுக்குமேல்நடந்ததாகவும், அந்தத் தீவுகள் தென் கொரியாவின் ஆக்கிரமிப்பில் உள்ள ஜப்பானின் தீவுகள் என்றும் தெரிவிக்கிறது ஜப்பான். அந்தத் தீவுகளுக்கு மேல், தங்கள்வான்பரப்பில்ரஷ்யாஅத்துமீறியதாகவும் கூறியது ஜப்பான். அத்தோடுதங்களதுவான்பகுதியில்அத்துமீறி நுழைந்ததற்காக ரஷ்ய அதிகாரிகள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர் என்று தென்கொரியா தெரிவித்தது.
ஆனால், சீனப் பாதுகாப்பு அமைச்சகம் தங்கள் நாட்டின் எந்தவொரு வானூர்தியும் எந்தவொரு நாட்டின் பிராந்தியத்தின் வான்வெளியிலும் நுழையவில்லைஎன்று இதற்குமறுப்புத் தெரிவித்தது.



## வாகைசூடினார்ஜோன்சன்!

லண்டன், ஜூலை 25
கடந்தசெவ்வாய்க்கிழமைபிரிட்டனில்இடம்பெற்றதலைமை அமைச்சர் தேர்தலில் வாகை சூடினார் அலெக்ஸாண்டர் பொரிஸ் பெயில் ஜோன்சன். நேற்றுப் புதன்கிழமை அவர் பிரிட்டனின்புதியதலைமைஅமைச்சரானார். ஏலவேபதவியில் இருந்த திரேசா மே, பிரெக்சிட் விவகாரத்தை நாடாளுமன்றில் நடைமுறைப்படுத்த முயன்று தோல்வியடைந்த நிலையில்பதவிவிலகமுடிவெடுத்தநிலையிலேயே. பிரிட்டனின் தலைமை அமைச்சர் பதவிக்கான போட்டி நடந்தது. இதில் பிரிட்டனின் அயலுறவுச் செயலர் ஜெரமிஹன்ட் எதிர் பொரிஸ்ஜோன்சன்என்றுபோட்டிஅமைந்தது. 92ஆயித்து 153 கொன்சவர்டிவ் கட்சி அங்கத்தவர்களின் ஆதரவுடன் ஜோன்சன் வெற்றியடைந்தார். புவிரைவில் பிரிட்டனின் எலிசபெத் மகாராணியார் முன்னிலையில் ஜோன்சன் தலைமை அமைச்சராகப் பதவியேற்க இருக்கிறார். அதே சந்தர்ப்பத்தில் திரேசா மே மகாராணியரிடமிருந்தும் தனது பதவியில் இருந்தும் விடைபெறவுள்ளார் என பன்னாட்டு ஊடகங்கள்தகவல்வெளியிட்டுள்ளன. 55வயதானஜோன்சன், முன்னாள் தலைமை அமைச்சர் திரேசாவின் அரசில் முக்கிய பதவி வகித்தவர். பிரெக்சிட் விவகாரம் காரணமாகவேஅவர்ஒருவருடத்துக்குமுன்னர்பதவிவிலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவநிலைகள்மீதுதாக்குதல் இஸ்ரேல் மீது சிரியா குற்றச்சாட்டு



தமது நாட்டின் இராணுவ நிலைகள் மீது இஸ்ரேல்தாக்குதல்நடத்தியதாகச்சிரியா குற்றஞ்சாட்டியது. சிரியாவின் தென்பகுதியில் உள்ள டாரா நகரில் இஸ்ரேல் இராணுவம் புதன்கிழமை வான்வழித் தாக்குதலைநடத்தியதாகவும், கடந்தஒரு மாதத்துக்கு முன்னரும் இஸ்ரேல் இதே பகுதியில் தாக்குதல் நடத்தியதாகவும் சிரியத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல் ஏதும் இதுவரை வெளிவரவில்லை. எனினும் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் சில கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக லண்டனை மையமாகக் கொண்டு செயற்படும்பன்னாட்டுக் கண்காணிப்பு குழு ஒன்று தெரிவித்தது. இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் தரப்பில் எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. கடந்த மாதம் சிரியா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 6 பொதுமக்கள் 9 சிரியச் இராணுவத்தினர் சாவடைந்தனர்.
சிரியாவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டதிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட வான்வழித் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சீனாவில் நிலச்சரிவு 12பேர் பரிதாபச் சாவு

பீஜிங், ஜூலை 25
சீனாவில் நிலச்சரிவு ஏற்பட்டது. அதில் சிக்கி 12 பேர் சாவடைந்தனர். 30க்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயினர். சீனாவின்தென்மேற்குப்பகுதியிலுள்ளகாயிஜோ மாகாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவிலேயே இவர்கள் சாவடைந்தனர். பல வீடுகள் நிலச்சரிவில் பாதிக்கப்பட்டுள்ளன. காணாமல் போனவர்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் இதே பகுதியில்ஏற்பட்டநிலச்சரிவில் ஒருவர்சாவடைந்தும்6பேர் காணமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஏமன் போர் இலகுவாக தீர்க்கப்படக் கூடியது!

## தெரிவிக்கிறது ஐ.நா.



ஏமன் போர் இலகுவாகத் தீர்க்கப்படக் கூடிய ஒன்று என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. ஏமனில்நடைபெறும்போர்குறித்துஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியான மார்ட்டின் கிர்வ்பித்ஸ் தெரிவிக்கையில், ஏமன் போர் இலகுவாகத் தீர்க்கக்கூடிய ஒன்று என்றார். ஏமனில் சண்டையிட்டு வரும் அரசும், கிளர்ச்சியாளர் குழுக்களும் அரசியல் ரீதியாக இதற்குத் தீர்வு காண விரும்புகின்றன. கடந்த வருடம் டிசெம்பரில் ஐ.நா.மேற்கொண்ட அமைதிப் பேச்சுக்களுக்குப் பன்னாட்டுச் சமூகம் ஆதரவு அளித்தது. ஏமன் போர் இலகுவாகத் தீர்க்கப்படக் கூடியது என்று நான் நம்புகிறேன்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### பின்னணி

தென்மேற்குஆசியநாடான ஏமனில், சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்திப் போராளிகளுக்கும்இடையே 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்துஉள்நாட்டுப் போர் நடக்கிறது. இதில் அதிபர்மன்சூர்ஹைதிக்கு ஆதரவாகச் சவூதி அரேபியா செயற்படுகிறது. ஹவுத்திப் போராளிகளுக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது. ஏமன் அரசுடன் இணைந்து சவூதி நடத்தும் மனிதாபிமானமற்ற தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபை கண்டித்து வருகிறது.

# புலமைப் பரிசில் பரிசளிப்பு நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜூலை 25

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வொன்றை கொமர்சல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை இன்று முன்னெடுக்கவுள்ளது.

கிளை முகாமையாளர் தலைமையில் கிளை மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம)

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாக மாணவரிடையே நேற்று கைகலப்பு: 11 பேருக்கு காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாக மாணவர்களிடையே நேற்றையதினம் கைகலப்பு ஏற்பட்டது.

இதில் காயமடைந்த 11 மாணவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கிளிநொச்சி அறிவியல்நகர்ப் பகுதியில் அமைந்துள்ள பொறியியல் பீடத்தைச் சேர்ந்த சிரேஸ்ட மாணவர்கள் மற்றும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடே மோதலுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அனைவருமே பெரும்பான்மை இனத்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-105)

கோரிக்கையை ஏற்று உணவொறுப்புக் கைவிடப்பட்டது. எனினும் தற்போது ஒரு மாதத்துக்கு மேலாகியும் கல்முனை வடக்கைப் பொறுத்தவரையில் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. (ம)

## உந்துருளி..

காலை 6 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் நவிண்டிலைச் சேர்ந்த 19 வயதுடைய திசாந் என்ற இளைஞரே உயிரிழந்தார், டிப்பரைச் செலுத்திய சாரதி நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-26,173)

## அனைத்து...

படியோ புத்தபகவான் கூறவில்லை. புத்தபகவான் இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரையும் நேசிக்கும்படி கூறியிருக்கின்றார். அதையே நான் செய்கிறேன் செய்வேன் என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், அந்தக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் எனக் கருதப்படுபவருமான சஜித் பிரேமதாஸ.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட உதயம் நகர் மற்றும் ஆதவன் நகர் ஆகிய இரண்டு மாதிரி கிராமங்களில் அமைக்கப்பட்ட 50 வீடுகள் நேற்று மக்களிடம் கையளிக்கப்பட்டன: இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களினதும் பிரச்சினைகளை எனது பிரச்சினையாக எடுத்துக்கொண்டு உங்கள் அனைவருக்கும் எதிர்காலத்தில் சிறந்த தலைமைத்துவத்தை நான் வழங்குவேன்.

அனைவரும் ஐக்கிய இலங்கை, ஒன்றிணைந்த இலங்கை, தேசியப் பாதுகாப்பு என்றெல்லாம் பேசுகின்றனர். இப்படியாக ஐக்கிய இலங்கையை நோக்கி, ஒன்றிணைந்த இலங்கையை நோக்கி நாங்கள் நகரவேண்டுமானால் எங்களுக்குள் நாங்கள் சில விடயங்களைக் களையவேண்டும். சில விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். எங்களுக்குள்ளாக நாங்கள் அனைவரும் ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் நோக்கிச் செல்லவேண்டும். எங்களுக்குள்ளாக மதங்கள், ஜாதிகள், நிறங்கள் போன்றவற்றிலிருந்து நாம் விடுபடவேண்டும். நாங்கள் அனைவரும் இலங்கையினுடைய குடிமக்கள் என்ற எண்ணம் அனைவர் மனதிலும் ஏற்படவேண்டும்.

இந்த அரசு எம்மை இரண்டாம் தரப்பாகவே நடத்துகிறது. இரண்டாம் தரப்பாகவே நேசிக்கிறது என்று சிலர் எண்ணுகின்றனர்: கதைக்கின்றனர். இது தவறாகும். இவ்வாறான எண்ணங்கள் சிலரால் திட்டமிட்டு ஊட்டப்படுகின்றன. நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர். நான் ஒரு சிறந்த பௌத்தன். பௌத்த மதத்தினுடைய கோட்பாடுகளைச் சரியான முறையில் கடைப்பிடிக்கின்றேன். யாரையும் உதாசீனப்படுத்தும்படியோ, ஒதுக்கும்படியோ, யாரிடமும் உயர்வு தாழ்வு பார்க்கும்படியோ புத்தபகவான் கூறவில்லை. புத்தபகவான் இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரையும் நேசிக்கும்படி கூறியிருக்கின்றார். அதையே நான் - செய்கிறேன் செய்வேன் என்றார். (ம-246)

## பிரபாகரன்...

என நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை கன்னியாவில் தமிழர்களின் பூர்வீக விநாயகர் ஆலயம் உடைக்கப்பட்டு அங்கே ஓர் பௌத்த விகாரை அமைக்கப்படுவதான இடத்திலே தமிழர்கள் கடந்தவாரம் பூசைக்காக கூடிய சமயம் பொலிசாரின் முன்னிலையில் இந்து சமய குரு முதல்வர் மீது சுடுதண்ணீர் ஊற்றப்பட்டது. இதற்கு சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் அரச தலைவரும், பொலிஸ்மா அதிபரும் பதிலளிக்க வேண்டும். இதுதொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால்தான் கோருகின்றேன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றிருக்குமா? அதேபோல் பிரபாகரனின் காலத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றதா? - என்றார். (ம-105)

## 30 கிலோ...

நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, வீடொன்றைச் சோதனையிட்டபோதே மேற்படி கஞ்சா மீட்கப்பட்டது. அது கடத்தலுக்குத் தயாராக வைக்கப்பட்டு இருந்தது. சந்தேகத்தின் அடிப்படையில் 55 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-106,26)

## தென்மராட்சி...

கொடிகாமத்தைச் சேர்ந்த சிவரசா ரவிக்குமார் (வயது - 48) என்பவரே தாக்குதலுக்குக்குள்ளாகி காயமடைந்தார். தவறனையைப் பூட்டிவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கும் போது இடையில் உந்துருளியில் வந்தவர்கள் இந்தத் தாக்குதலை நிகழ்த்தியுள்ளனர். அவரின் கைப் பையிலிருந்த 38 ஆயிரம் ரூபா பணமும், முக்கிய ஆவணங்களும் திருடப்பட்டன - என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம-159)

## கொழும்பில்...

தெரிவித்தார்.

அந்தவகையில், முன்னாள் நகைக்கடை உரிமையாளரான தம்பு சங்கர் கடத்தப்பட்டமை தொடர்பிலும் விசாரணை தொடர்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதி மாலை கொழும்பு செட்டியார் தெருவில் வைத்து இனந்தெரியாத நபர்கள் வந்த வெள்ளை வானில் முன்னாள் நகைக்கடை உரிமையாளரான தம்பு சங்கர் என்பவர் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம், நயினாதீவைச் சேர்ந்த இவர் கடத்தப்பட்டமை குறித்து அவரது சக நண்பர்களால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், இதுவரையிலும் அது குறித்த எந்தவொரு தகவலும் வெளியாகவில்லை என்று குறிப்பிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர், இது தொடர்பில் மேலதிக விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது எனவும் கூறினார்.

இதேவேளை, நீர்கொழும்பு கடற்கரை வீதியில் வைத்து 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் 10ஆம் திகதி வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட 40 வயதுடைய சுப்பிரமணியம் தவராஜசிங்கம் என்பவர் தொடர்பான விசாரணைகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ம-22)

## பொய்த்தது...

முறையில் அனைத்து அதிகாரங்களுடன் கூடிய பிரதேச செயலகமாக தரம் உயர்த்த தரக்கோரி ஐவர் உணவொறுப்பில் ஈடுபட்டு வந்தனர். தங்களது கோரிக்கைகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வரும்வரை தாங்கள் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என அவர்கள் வலியுறுத்தினர். நாளுக்குநாள் இவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு குவிந்தது. இந்த நிலையில் போராட்ட களத்துக்கு நேரில் சென்ற பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரர், ஒருமாதத்துக்குள் தீர்வு தருகின்றேன். தற்போது போராட்டத்தைக் கைவிட வேண்டும். ஒருமாதத்துக்குள் தீர்வு தராவிட்டால் எனது தலைமையில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று கோரிக்கை விடுத்தார். அவரின் இந்தக்

## கோத்தபாய...

ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஸ் குணவர்த்தன, கூட்டு எதிரணியின் முக்கிய மான தலைவர்களில் ஒருவராக இருக்கிறார். பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளருக்கு முதல் தெரிவாக கோத்தபாயவே இருக்கிறார். எனினும், அவர் அரச தலைவர் வேட்பாளராக போட்டியிடுவதற்கான தகுதியைப் பெற முடியுமா என்பதில் பலத்த சந்தேகங்கள் நிலவுகின்றன.

கோத்தபாய ராஜபக்ச அமெரிக்க குடியுரிமையைத் துறந்திருப்பது தொடர்பான முறைப்படியான அறிவிப்பை அமெரிக்க அதிகாரிகள் இன்னமும் வெளியிடவில்லை. இந்த நிலையில், அவரால் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டால், பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக தினேஸ் குணவர்த்தன நிறுத்தப்படக் கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## ஐ.நா. ...

துறை அமைச்சின் அதிகாரிகளுக்கு அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகளை அடுத்தே அவர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஐ.நா சிறப்பு அறிக்கையாளர், 2011ஆம்; ஆண்டில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் றொசான் சானக கொலை செய்யப்பட்டமை, மற்றும் 2012ஆம் ஆண்டில் நிகழ்ந்த ரதுபஸ்வெல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளார் என மகிந்த ராஜபக்ச நேற்று நாடாளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

ஐ.நா அறிக்கையாளர் நீதித்துறை அதிகாரிகளிடம் கேள்வி எழுப்புவது, நீதித்துறையில் தலையீடு செய்யும் முயற்சி என்றும், இந்தச் சந்திப்பை நடக்காமல் தடுக்குமாறும், அவர் சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டார். அதேவேளை, நீதி அதிகாரமற்ற நபர் ஒருவர் நீதித்துறையில் தலையீடு செய்ய அனுமதிப்பது, அரசியலமைப்பின் 111சி முதலாவது பிரிவை மீறும் செயல் என தினேஸ் குணவர்த்தனவும் சுட்டிக் காட்டினார்.

நீதியமைச்சர் தலதா அத்துகோரள மற்றும் தலைமை நீதியரசர், கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகளை, ஐ.நா அறிக்கையாளருடனான சந்திப்புக்கு ஒழுங்கு செய்யுமாறு நீதி அமைச்சின் செயலரிடம், அயலுறவுத்துறை அமைச்சின் மேலதிக செயலர் அகமட் ஜவாட் கோரியிருக்கிறார் என்றும் அவர் குறிப்பிட் டார். அவ்வாறான சந்திப்புக்கு அமைச்சர்களும், செயலர்களும் அனுமதிப்பது, நீதிமன்ற அவமதிப்பாக இருக்கும் என்றும், அவ்வாறு சந்திப்புக்கு ஒழுங்கு செய்யும் அமைகளையும், செயலர்களையும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விஜேதாச ராஜபக்ச எச்சரித்தார்.

இந்த விவாதத்தை அடுத்து, ஐ.நா சிறப்பு அறிக்கையாளரை, தலைமை நீதியரசர் உள்ளிட்ட நீதித்துறை அதிகாரிகள் சந்திப்பதற்கான ஒழுங்குகளை நிறுத்துமாறு அயலுறவுத்துறை அமைச்சின் அதிகாரிகளுக்கு தாம் அறிவுறுத்தியுள்ளதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய சபையில் அறிவித்தார். (ம)

## உயிரிழந்தவருடன்..

மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே அவ்வாறு கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களிடம் பல்வேறு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதாகவும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை மானிப்பாய் சுதுமலைப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொடிகாமம் கச்சாய் பகுதியைச் சேர்ந்த 23 வயதான செ.குவிகஜன் என்ற இளைஞர் உயிரிழந்தார். சம்பவத்தின் பின்னர், மானிப்பாய் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர், சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 3 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னரே, நேற்றையதினம் இந்த இரு இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சுமார் 19 வயது முதல் 23 வயது வரையான இளைஞர்களே கைதுசெய்யப்பட்டவர்கள் என்றும், கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர், நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-106)

## முதலைக் கண்ணீர்...

தமிழ் மக்களுக்கு எதிராகவே கறுப்பு ஜூலை இனக் கலவரம் தோற்றம் பெற்றது. இதற்கு தற்போதைய அரசில் உள்ள முக்கிய தரப்பினர்கள் நிச்சயம் பொறுப்புக்கூற வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க அண்மைக்காலமாக தமிழர்களின் தீர்வு தொடர்பான கருத்துப் பகிர்வுகளை அதிகம் மேற்கொண்டு வருகின்றார். கடந்த 15ஆம் திகதியன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு பரிசளிப்புத் தினத்தன்று தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில், இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். இதையடுத்து ரணிலின் கருத்துக்களுக்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையில் தயாசிறி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு சந்திரிக்கா ஆட்சியிலிருந்தபோது, தமிழ் மக்களின் பிரச்சினையை ஒற்றையாட்சி முறைமூலம் தீர்க்க முடியாது. எனவே பிராந்தியங்களின் கூட்டாட்சி முறை மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணவேண்டும் என்கின்ற ஒரு திட்டத்தை இலங்கை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். அதை முதல் நபராக நின்று எதிர்த்து அந்தத் திட்ட நகலை ரணில் கிழித்து எறிந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

### மரண அறிவித்தல்

## திருமதி மலர் நாகேஸ்



மண்ணில் 28.03.1954 விண்ணில் 24.07.2019

இளவாலை கல்லூரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ் மலர் நேற்று (24.07.2019) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ் அவர்களின் அன்பு மனைவியும், டினோசினின் பாசமிகு தாயாரும், றஜீவாவின் அன்பு மாமியாரும் திவ்வியன், ஜீவிதன், ஐசானி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2019) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வட்டுவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

0776309588, 0779597339, 0762994406

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 25
கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவலர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் நாவலர் விளையாட்டுக் கழக அணி 10:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் இளங்கதிர்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஞான வைரவர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி மின் ஒளி விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் ஞான வைரவர் விளையாட்டுக் கழக அணி 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

## தேவன்பிட்டி சென்.சேவியர் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை 25
சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக்கழகம் அருட்சகோதரன் கில்லறி ஜோசப் அவர்களின் 100 ஆவது பிறந்த நாளைமுன்னிட்டும், கில்லறி விளையாட்டுக்கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தோட்டவெளி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## ஆவரங்கால் இந்து இளைஞர், ஆவரங்கால் மத்தி இறுதிக்கு

ஸ்கதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர், ஆவரங்கள் மத்தி வி.க அணிகள் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றன.
முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க அணி- புத்தூர் வளர்மதி வி.க. அணிகள் மோதின. இதில் 3:0 என செற் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க அணி வெற்றி பெற்றது. இரண்டாவது அரையிறுதியில் ஆவரங்கால் மத்திய வி.க அணி- புத்தூர் கலைமதி வி.க அணிகள் மோதியன. இதில் 3:1 என்ற செற் கணக்கில் ஆவரங்கால் மத்திய வி.க அணி வெற்றி பெற்றது. (23)

## பளுதூக்கும் சம்மேளனத்தின் உபதலைவர், இணைப்பாளராக கனகராஜா தெரிவானார்



யாழ்ப்பாணம்,ஜூலை 25
இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனத்தின் உபதலைவர் மற்றும் வடக்கு -கிழக்கு மாகாணங்களின் இணைப்பாளராக கனகராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனம் நிர்வாகத் தெரிவில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் க.கனகராஜா இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனத்தின் உபதலைவர் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (422)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்.கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைஒளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மணியந்தோட்டம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒலிம்பிக் விளையாட்டுக் அணி மோதவுள்ளது. (23)

# தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் கிண்ணத்தைச் சுவீகரித்தது



யாழ்ப்பாணம்,ஜூலை 25
தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மன்னார் மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாழ்வுபாடு பிறீமியர் லீக் ரி- 20 துடுப்பாட்டத் தொடரில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 92 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.
தாழ்வுபாடு விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பேசாலை சென்.விக்ரறிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் சுகந்தன் 69 ஓட்டங்களையும்,மேனன் 53 ஓட்டங்களையும், றோய் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அனஸ் 3 இலக்குகளையும், ஆனந் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய சென்.விக்ரறிஸ் விளையாட்டுக்கழக அணி 19.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 106 ஓட்டங்களை மட்டும் பெற்று 92 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் அனஸ் 35 ஓட்டங்களையும், சிந்துயன் 10 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சுகந்தன் 4 இலக்குகளையும், சுயன் 3 இலக்குகளையும், ஜெறோன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் சுகந்தன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக பேசாலை சென்.விக்ரறிஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் திலீபன் தெரிவானர். சிறந்த பந்து வீச்சாளராக தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் ஜெறோன் தெரிவு செய்யப்பட்டார். (23)

### பளுதூக்கலில்
## அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மாணவிகள் இருவருக்கு தங்கப் பதக்கம்





தேசிய மட்ட பளுதூக்கலில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரிக்கு இரு தங்கப் பதக்கங்கள் கிடைத்தன. இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனம் நடத்திய அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கலில் 16 வயதுக்குட்பட்ட பிரிவில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த சூ.நிதுஷா, டி.பிரகவி ஆகியோர் தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்தனர்.
இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட பளுதூக்கல் போட்டிகள் கடந்த சனிக்கிழமை கேகாலை ராஜகிரிய மகா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.
இதில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியைப் பிரதி நிதித்துவம்செய்த சூ.நிதுஷா 64 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 35 கிலோ பளுவையும், கிளின் அன் ஜக் முறையில் 47 கிலோ பளுவையும் ஒட்டுமொத்தமாக 82 கிலோ பளுவையும், அதே கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த டி.பிரகவி 76 கிலோ எடைப் பிரிவில் சினெச் முறையில் 33 கிலோ பளுவையும், கிளின் அன் ஜக் முறையில் 40 கிலோ பளுவையும் ஒட்டுமொத்தமாக 73 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தனர். (422)

## நவிண்டில் கலைமதி அரையிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 25
வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகம் மைதான திறப்பு விழாவை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி "கழக மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதியது. இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி சார்பில் பானு,விது ஆகியோர் தலா ஓர் கோலையும், சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக அணி சார்பில் தார்மீகன்,அனுசாந் ஆகியோர் தலா ஓர் கோலையும் பதிவு செய்தனர். வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. ஆட்டநாயகனாக நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி வீரர் பானு தெரிவு செய்யப்பட்டார். (23)



## குலசேகர ஓய்வு

இலங்கை அணியின் வீரர் நுவான் குணசேகர பன்னாட்டு கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.
இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராகவும், பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் பந்து வீச்சாளர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்த இலங்கையின் முதல் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றிருந்தார்.
எனினும் நுவன் குலசேகரவுக்கு நீண்டகாலமாக அணியில் இடம் வழங்கப்படவில்லை. அதனால் பெரும் விரக்தியிலிருந்த அவரை மீண்டும் பேசுபொருளாக்கியவர் மலிங்கதான். மலிங்க ஓய்வுபெறும் முன் குலசேகரவுடன் சேர்ந்து விளையாட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.
இதேவேளை அண்மையில் ஓய்வு பெறுவதற்காக தனக்கு ஒரு போட்டியைப் பெற்றுத் தருமாறு நுவன் குலசேகர எழுத்து மூலம் இலங்கைக் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுத்திருந்த நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

# விருதுக்கு தகுதியானவர் வில்லியம்ஸன் மட்டுமே

### விருதை பணிவுடன் புறக்கணித்த பென்ஸ்டோக்ஸ்



நியூசிலாந்தின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதுக்கு தகுதியானவர் வில்லியம்ஸன்தான் எனக் கூறி நியூஸிலாந்து அளிக்க இருக்கும் விருதை பணிவுடன் பென்ஸ்டோக்ஸ் மறுத்துவிட்டார்.
நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணி கிண்ணம் வென்று மகுடம் சூடியது. பல்வேறு சர்ச்சைகளின் மத்தியில் இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி கிண்ணத்தைத் தனதாக்கியது.
இந்தப் போட்டியில் பென்ஸ்டோக்ஸ்தான் இங்கிலாந்து அணி கிண்ணம் வெல்ல முக்கிய காரணமாக இருந்தார். அவரே ஆட்டநாயகன் விருதும் பெற்றார்.
இங்கிலாந்து அணி கிண்ணத்தை வென்றபின் அந்த அணி வீரர் பென்ஸ்டோக்ஸின் விளையாட்டு அனைவராலும் பாராட்டப்பட்டது. நியூசிலாந்தில் பிறந்தவரான பென்ஸ்டோக்ஸ் அதற்குபின் இங்கிலாந்து சென்று அந்த நாட்டுக்காக விளையாடி வந்தார்.
இதனால், நியூஸிலாந்தின் சிறந்த கிரிக்கெட் வீரர் விருதுக்கு பென்ஸ்டோக்ஸும் பரிந்துரைக்கப்பட்டார்.
இந்த நிலையில், நியூஸிலாந்து சார்பில் தனக்கு அளிக்கப்பட இருக்கும் விருதை பென்ஸ்டோக்ஸ் மிகவும் பணிவுடன் மறுத்துள்ளார்.
இது குறித்து அவர் தெரிவிக்கையில்;
நியூசிலாந்து நாட்டின் சிறந்த விளையாட்டு வீரர் விருதுக்கு நான் பரிந்துரைக்கப்பட்டது என்னை பெருமைப்படுத்துகிறது. என்னுடைய நியூசிலாந்தையும், பாரம்பரியம் கொண்ட மவுரி இனத்தவரையும் நினைத்து பெருமைப்படுகிறேன்.
ஆனால், அந்த விருதுக்கு தகுந்தவர் நான் இல்லை. நியூசிலாந்து நாட்டுக்காக ஏராளமான சாதனைகளைச் செய்தவர்கள்தான் இந்த அங்கீகாரத்துக்கு தகுதியானவர்கள்.
இங்கிலாந்து உலகக் கிண்ணத்தை வெல்ல நான் உதவி இருக்கிறேன். நான் 12 வயதில் இருந்து இங்கிலாந்து நாட்டுக்காக என் வாழ்க்கையை வாழ்ந்து வருகிறேன்.
நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்ஸனுக்குதான் அந்த நாட்டு மக்கள் அனைவரும் ஆதரவு அளிப்பார்கள் என்று நான் உணர்கிறேன்.
நியூஸிலாந்து மக்களின் போற்றதலுக்குரியவராக வில்லியம்ஸன்தான் இருக்க வேண்டும். உலகக் கிண்ணத்தில் நியூசிலாந்து அணியை சிறப்பாக வழிநடத்தி மேன்மையான இடத்துக்கு கொண்டுவந்து மிகப்பெரிய பெருமையை வில்லியம்ஸன் சேர்த்துள்ளார். வில்லியம்ஸன்தான் தொடர் நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். அவர் இளம் விளையாட்டு வீரர்களுக்கு உத்வேகமாகவும் இருப்பார்.
மைதானத்தில் ஒவ்வொரு சூழலிலும் மற்றவர்களின் உணர்வுகளை அறிந்து செயற்படுதல், பணிவாக இருத்தல் என அனைத்திலும் சிறந்த மனிதராக வில்லியம்ஸன் விளங்கினார். நியூசிலாந்து நாட்டின் உதாரணமாக வில்லியம்ஸன் இருந்தார்.
நியூஸிலாந்து அளிக்கும் விருதுக்கு தகுதியானவர் வில்லியம்ஸன் மட்டுமே. எனது ஓட்டும் வில்லியம்ஸனுக்கே - என்றார்.



## மான்செஸ்டர் விமான நிலைய அதிகாரிகள் மீது அக்ரம் குற்றச்சாட்டு

இங்கிலாந்தின் மான்செஸ்டர் விமான நிலையத்தில் தன்னை அதிகாரிகள் மிக மோசமாக நடத்தியதோடு அனைவர் முன்னிலையிலும் அவமானகரமாகப் பேசியதாகக் குற்றச்சாட்டு சாட்டினார் பாகிஸ்தானின் முன்னாள் அணித் தலைவர் வசீம் அக்ரம்.
வசீம் அக்ரம் நீரிழிவு நோயாளி என்பதால் அவர் விளையாடிய காலத்தில் கூட இன்சுலின் எடுத்துக் கொண்டு ஆடுபவர், இந்த நிலையில் அவர் இன்சுலின் வைத்திருந்த குளிர்பதனப் பெட்டியிலிருந்து அதை எடுத்து பிளாஸ்டிக் பையில் வைக்குமாறு அதிகாரிகள் உத்தரவிட்டனர்.
இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;
மான்செஸ்டர் விமானநிலையத்தில் மனம் உடைந்து போனேன். நான் என் இன்சுலின் பெட்டியுடன் தான் உலகம் முழுதும் சுற்றி வருகிறேன். ஆனால் ஒருமுறை கூட என்னை யாரும் தர்மசங்கடமான கேள்விகளைக் கேட்டதில்லை.
மிகவும் மோசமான முறையில் அவர்கள் என்னை விசாரித்ததில் என்னை இழிவு படுத்தியதாக உணர்கிறேன். பொதுவெளியில் என் இன்சுலின் பெட்டியை எடுத்து பிளாஸ்டிக் பையில் திணிக்க கடும் உத்தரவிடப்பட்டேன். நான் எனக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கோரவில்லை. யாரை கையாண்டாலும் ஒரு அக்கறை வேண்டும் என்றுதான் கோருகிறேன். முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெச்சரிக்கைகள் பற்றி நான் புரிந்து கொள்கிறேன், ஆனால் அதற்காக இழிவு படுத்த வேண்டும் என்று அர்த்தமல்ல - என்றார்



## பிரியாவிடைப் போட்டிக்கு அனுமதி கோரினார் குலசேகர

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான நுவான் குலசேகர தனக்கு பிரியாவிடைப் போட்டியொன்றில் விளையாட அனுமதி வேண்டி எழுத்து மூலமாக கேட்டுக்கொண்டுள்ளார்.
இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான பன்னாட்டு ஒருநாள் போட்டி தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதில் இலங்கை கிரிக்கெட் நிறுவன செயலர் மொஹான் டி சில்வா இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளரான நுவான் குலசேகர தனக்கு பிரியாவிடைப் போட்டியொன்றில் விளையாட வேண்டி எழுத்து மூலமாக கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.
அது தொடர்பில் நாம் ஆலோசனை நடத்தி தீர்மானமொன்றை எடுப்போம் எனவும் தெரிவித்தார்.
பன்னாட்டு ஒருநாள் போட்டி பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் முதலிடம் பிடித்த ஒரேயொரு இலங்கை வீரர் நுவான் குலசேகர என்பது குறிப்பிடத்தக்கது.
இவர் 184 போட்டிகளில் 199 இலக்குகளைச் சாய்த்துள்ளார். இவர் இறுதியாக 2017ஆம் ஆண்டு இலங்கைக்காக விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

## ஹத்துரு சிங்கவை பதவி விலக்க தீர்மானம்

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளர் ஹத்துரு சிங்கவை பதவியில் இருந்து விலகுமாறு இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.
இந்த நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவின் அறிவுறுத்தலுக்கு அமைய இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் ஹதுருசிங்க உள்ளிட்ட ஏனைய பயிற்சியாளர்கள் குழுவை அவர்களது பதவிகளில் இருந்து விலகுமாறு அறிவிக்க இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### தரப்படுத்தலில்

## மான்செஸ்டர் யுனைடெட் கழக அணி 6ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டது



போர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் மிகவும் மதிப்புமிக்க கழக அணிகள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இந்த வருடம் வெளியிட்டுள்ள பட்டியலில் பிரிட்டனின் தலைசிறந்த கால்பந்து கழகமான மான்செஸ்டர் யுனைடெட் 2ஆவது இடத்தில் இருந்து 6ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.
முதலிடத்தை அமெரிக்காவின் டல்லாஸ் கவ்பாய்ஸ் கழகம் பிடித்துள்ளது. இந்தக் கழகத்தின் மதிப்பு 5 பில்லியன் டொலர் ஆகும். நியூயோர்க் யங்கீஸ் என்ற பேஸ்பால் கழகம் 4.6 பில்லியன் டொலருடன் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. ஸ்பெயின் நாட்டின் முன்னணி கால்பந்து கழகமான ரியல் மட்ரிட் 4.24 பில்லியன் டொலருடன் 3ஆவது இடத்தையும், பார்சிலோனா அணி 4.02 பில்லியன் டொலருடன் 4ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

## வாடகைக்கு

நல்லூரில் பக்தர்களுக்கு ஏற்ற இணைந்த குளியலறை, சமையலறை வசதியுடன் கூடிய அறை குறுகிய காலத்திற்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 071 513 0100

# குத்துச் சண்டையில் ரஷ்ய வீரர் சாவு

மேரிலாந்தில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் மூர்க்கத்தனமான சண்டையின் போது ரஷ்யாவை சேர்ந்த 28 வயதுடைய குத்துச் சண்டை வீரர் உயிரிழந்த சம்பவம் ஒன்று அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குத்து சண்டைப் போட்டியில் காயமடைந்த 28 வயதுடைய மக்சிம் தாதாசேவ் மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவோடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கோமா நிலைக்கு சென்ற பின்னர் அவருக்கு மண்டை ஓட்டின் வலது பக்கத்தை அகற்றி அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனினும் அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

போட்டியின் போது மக்சிம் தாதாசேவின் தலையில் பல முறை தாக்குதல் இடம்பெற்றுள்ளதால் அவர் மூளையில் இரத்தக்கசிவேற்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேட் மக்ஸ் என்ற புனைப் பெயர் கொண்ட மக்சிம் தாதாசேவுக்கு இரண்டரை வயதில் குழந்தை ஒன்று உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல்யமான உணவுப்பொருள்கள் உற்பத்தி நிறுவனத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடம்.

**தகைமை**

01. வயதெல்லை : 30 - 40(இருபாலாரும்)
02. கல்வித்தகைமை : உள்வாரி அல்லது வெளிவாரி பட்டம்.
03. அனுபவம் : 3 வருடம் (நிர்வாகம் தொடர்பாக)
04. சம்பளம் : நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 277 1436
021 228 3323




## பயிற்சியாட்டத்தில்
# பார்சிலோனாவை வீழ்த்தி செல்சி அணி அபார வெற்றி

யப்பானில் நடைபெற்ற ப்ரீ பருவகால நட்பு ரீதியிலான ஆட்டத்தில் பார்சிலோனாவை 2:1 என வீழ்த்தியது செல்சி.

ஐரோப்பிய நாடுகளில் 2019 -2020ஆம் ஆண்டுக்கான கால்பந்து லீக் தொடர்கள் இன்னும் ஆரம்பமாகவில்லை. அதற்கு முன் நட்பு ரீதியிலான ஆட்டங்கள் சில நடைபெற்று வருகின்றன.

அதனடிப்படையில் ஸ்பெயின் நாட்டின் முன்னணி கழகமான பார்சிலோனா இங்கிலாந்தின் முன்னணி கழ்கமான செல்சி அணிகள் மோதிய ஆட்டம் நேற்று யப்பானில் நடைபெற்றது.

முதலாவது ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்தில் செல்சி அணி வீரர் டேமி ஆப்ரஹாம் கோல் ஒன்றைப் பதிவு செய்ய முதல் பாதி நேர ஆட்டத்தில் செல்சி அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலி ருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தும் இரு அணிகளும் நீண்டநேரம் கோல்கள் எதனையும் போடவில்லை.

ஆட்டத்தின் 81ஆவது நிமிடத்தில் செல்சி அணி வீரர் ராஜ் பார்க்ளே ஒரு கோலைப் போட்டார். ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் ராகிடிச் ஒரு கோல் போட இறுதியில் செல்சி அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▸ 264
சீட்டிழுப்பு திகதி ▸ 24.07.2019 நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| X | 17 19 25 | 01 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12, 100, 264/=

27.07.2019 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## தொழில் முயற்சி தொழில் வாய்ப்பு

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களே!

உங்கள் படிப்பின் பின்னரான காலப்பகுதியில் Certificate உடன் கூடிய தொழில்பயிற்சி வழங்கி அதன் மூலம் தொழில்வாய்ப்புக்களும் ஏற்படுத்தி தரப்படும்.

* O/L படித்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
* தொழில்பயிற்சிக்காக கோரப்படும் மாவட்டங்கள் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா)

தொடர்புகளுக்கு
077 695 3242, 077 589 4421

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 . 05 . 1943 | 23 . 07 . 2019 |

### கந்தசாமி சிவபாக்கியம்

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி சிவபாக்கியம் 23.07.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா - கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் அன்னலட்சுமியின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கந்தசாமியின் அன்பு மனைவியும் குமரவேள்(சமுர்த்தி முகாமையாளர, பிரதேசசெயலகம், உடுவில்), பிரியதர்சினி (சுவிஸ்), உஷாநந்தினி(பிரான்ஸ்), சிவாஜினி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சசிகலா, காலஞ்சென்ற தங்காதரன் மற்றும் சசிகரன்(பிரான்ஸ்), றஜீந்திரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற தேவாம்பிகை மற்றும் தவமலர், பாஸ்கரன்(நோர்வே), சாவித்திரி, கோடீஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும் மார்க்கண்டு, ஜெயராசா, இராஜசேகரம், சிவலோகநாயகி, தாரணி, காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் நேசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் காருண்யா, சுபானா, வந்தனா, றித்திகா, பிரணவன், சௌமியா, தர்மிகா, அஜீசன், பிரகதி, கவின், மகிழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2019) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :குடும்பத்தினர்.
க.குமரவேள் (மகன்)

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் இராஜேந்திரகுமார் (பொபி)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30.09.1945 | 20.07.2019 |

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் இராஜேந்திரகுமார் (பொபி) 20.07.2019 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம் - மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற புனிதவதனியின் அன்புக் கணவரும், டினேஸ்குமார் (உரிமையாளர் - Smart Touch Mobile's), நொய்லின் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலேந்திரகுமார், மகேந்திரகுமார் (சனா), செல்வேந்திரகுமார், சௌந்தரகுமார், இராஜ்குமார் (ராஜன்), றொபேந்திரகுமார் (றொபின்), சூரியகுமார் (சூரியன்), பத்மினி, தவக்குமார், ரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் டிலோன், ராதா ஆகியோரின் மாமனாரும், ஜொஸ்லின், ஜோன், அக்ஷிகா, டிஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (25.07.2019) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 370 0662

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25 .07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.